பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 05 வெள்ளிக்கிழமை 17.02.2023 கதிர் 101

**இது ரகசியம் அல்ல!**

தாமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று உரிமை கொண்டாடும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 14 ஆம் திகதியிட்டு ஒரு நீண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளது. ஆனால் கடந்த இரு நாள்களில் அதனை ☞2

# அமெ. பாதுகாப்பு உயர் குழு கொழும்பில் முக்கிய பேச்சு





### பிராந்திய பாதுகாப்பு உறுதிப்பாடு குறித்து ஆராய்வு

இந்தோ - பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமெரிக்காவின் முதன்மைப் பிரதி உதவிப் பாதுகாப்புச் செயலாளர் ஜெடிடியா பி றொயல் தலைமையிலான உயர் மட்ட தூதுக்குழு கொழும்பில் உயர்மட்டச் சந்திப்புக்களில் ஈடுபட்டு வருகின்றது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோரை நேற்று இருவேறு சந்தர்ப்பங்களில் இந்தக் குழு சந்தித்துப் பேசியது. ☞10

## இளம் பொலிஸ் அலுவலர் தவறான முடிவு

தென்மராட்சி, பெப். 17

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்வயல் கிராமத்தில் வியாழக்கிழமை பிற்பகல் ☞10

## மட்டு. வாவியில் மிதந்த சடலம்



(பழுவூரான்)

மட்டக்களப்பில் கடந்த மூன்று தினங்களாகக் காணாமற் போயிருந்த இளைஞனின் ☞10

## தேர்தலை ஒத்திவைப்பதற்கே ரணில் - ராஜபக்ஷ அரசு சூழ்ச்சி

### தோல்விப் பயமே காரணம் என ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு



தோல்வி அச்சத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கான பல்வேறு சூழ்ச்சிகளை ரணில் – ராஜபக்ஷ அரசு மேற்கொண்டு வருகின்றது என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

தேர்தலை நடத்தாமல் மக்களின் ஜனநாயக உரிமையான வாக்குரிமையை இல்லாது செய்வதற்கு அரசு முயற்சிக்கின்றது என சங்கத்தின் தலைவர் ☞10

## 12 மாவட்டங்களில் டெங்கு அபாயம்

### 16 நாட்களில் 3,637 நோயாளர்கள்

இலங்கையிலுள்ள 12 மாவட்டங்களில்டெங்குஅபாயநிலைமை ஏற்பட்டுள்ளது எனச் ☞10

## பாலியல் துன்புறுத்தல் சந்தேகநபர்கள் நால்வர் கைது

பத்து வயது சிறுமி ஒருவரைப் பாலியல் ரீதியாகத் ☞10

## யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சிக்குச் சிக்கல்

### நிலுவை செலுத்தாவிட்டால் அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், பெப்.17

யாழ்ப்பாணத்தில் வருடாந்தம் நடைபெற்றுவரும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இந்த ☞10

## பிரபாகரனின் பெயரை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தாதீர்கள்

### பிரதமர் தினேஷ் இப்படி வலியுறுத்து



தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இறுதிப் போரின்போது உயிரிழந்துவிட்டார். எனவே, அவரின் பெயரை வைத்து அரசியல் பிழைப்பு நடத்துவதை தமிழ் அரசியல் தலைவர்கள் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்.

– இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன ☞10

## தலைவர் பிரபாகரன் வருவாரா? பொறுத்துப் பார்க்கவேண்டுமாம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வருவாரோ இல்லையோ என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டுமெனக் கூறியுள்ள, தமிழ் மக்கள் ☞10

## பொன்சேகா போர்த்துக்கல் பெயர் அவரை அங்கேயே ஓடச் சொல்லுங்கள்

### விக்னேஸ்வரன் எம்.பி. பதிலடி



(எஸ்.நிதர்ஷன்)

பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா சிங்களவரில்லை. அவரின் பெயர் கூட போர்த்துக்கல் நாட்டில் இருந்து வந்ததுதான். ஆகவே அவரை போர்த்துக்கல்லுக்கே போகச் சொல்லுகிறேன் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார். ☞10

### மீனவர் மீதான தாக்குதல் குறித்து விசாரிக்குக

## வன்முறைகளை யாரும் கையிலெடுக்கக்கூடாது

### அமைச்சர் டக்ளஸ் அறிக்கை



இந்தியக்மீனவர்கள்மீதுதாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவெளியாகிய செய்தி தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அது தொடர்பில் விரிவான விசாரணை நடத்தி ☞10

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவொரு ஊடகமும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. அது ஏன் என்பது தெரியவில்லை. நேற்றுத்தான் அந்த அறிக்கை என் கைகளுக்குக் கிடைத்தது.

அந்த அறிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் இயக்கம் என்று ஒரு புது வியாக்கியானம் கொடுத்துள்ளது. ஆங்கிலத்தில் அதனை பெலிடிக்கல் ஓர்கனைசேசன் (political organization) என்று விளக்கமளித்துள்ளது. ஓர்கனைசேசன் என்றால் நிறுவனம் அல்லது அமைப்பு என்று மொழிபெயர்ப்பதே இதுவரையில் இருந்த மொழிப் பண்பாடு. இயக்கம் என்ற சொல் மூவ்மென்ட் (movement) என்கிற ஆங்கிலவார்த்தைக்குரியமொழிபெயர்ப்பாகவே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது.

சரி விடுங்கள்! கூட்டமைப்புக்கே புது விளக்கங்கள் வரும்போது ஆங்கிலச் சொற்களுக்கு புது மொழிபெயர்ப்பு மட்டும் வராத என்ன?

அறிக்கையின் தொடக்கத்தில் தமிழ் அரசுக் கட்சி கூட்டமைப்பைவிட்டுச் சென்றது எதிர்பாராத விதமாக நடந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கட்சி மத்திய குழுவைக்கூட்டி இது தொடர்பில் ஒரு முடிவை எடுத்துவிட்டுப் பின்னர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்திலும் அதனையே கூறிவிட்டு வெளியேறிவிட்டது என்று கூறப்பட்டிருக்கின்றது.

ஆனால், மற்றொரு இடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்யவேண்டும் என்று கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டபோது (கூட்டமைப்புக்கு என்று ஒரு ஒருங்கிணைப்புக்குழுவே இருந்ததில்லை. இருந்ததெல்லாம் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு மட்டும்தான். இது கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவாக இப்போது பெயரிடப்படுகிறது) "தமிழ் அரசுக் கட்சியையே அழிக்கப்போகிறீர்களா?" என்று இரா. சம்பந்தன் பகிரங்கமாகவே கேள்வி கேட்டார் என்றும் அதன் மூலம் கூட்டமைப்புக்குள் தனது கட்சியின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தவே முயன்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படி அவர் தனது கட்சியின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சிக்கும்போதே அதற்கு வழிவிட முடியாத என்ற நிலைப்பாட்டில் மற்றைய இரு கட்சிகளும் இருந்திருந்தால், அப்போதே பிளவு, பிரிவு பற்றித் தெரிந்திருக்கவேண்டுமே. அதென்ன, தமிழரசுக் கட்சியின் முடிவு எதிர்பாராத விதமாக இருந்தது என்ற அறிவிப்பு. ஒவ்வொரு தேர்தலின் போதும் ரெலோவும் புளொட்டும் கூட்டமைப்பைப் பதிவு செய்யக் கோருவதும் அதை சாக்குப் போக்குச் சொல்லி தமிழ்அரசுக்கட்சி தள்ளிப்போடுவதும், நெருக்கடியைக் கொடுத்து ஆசனப் பங்கீட்டில் செல்வாக்குச் செலுத்த முனைந்த பின்னர் அடுத்த தேர்தல் வரையில் அது கிடப்பில் போடப்படுவதும் தமிழ் மக்கள் மறந்துவிட்ட விடயங்களா என்ன? சொல்லப்போனால் இந்தத் தேர்தலில் இந்த இரு கட்சிகளுக்கும் தமிழ் அரசுக் கட்சியைவிட்டுவிட்டு தேர்தலை எதிர்கொள்ளும் துணிவு வந்தது தான் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் எதிர்பாராதது.

தமிழ் அரசுக் கட்சி பிரிந்த பின்னர் கூட்டமைப்பில் இருந்த இரு கட்சிகளும் மேலும் மூன்று கட்சிகளையும் ஒருங்கிணைத்துக்கொண்டு அதனைப் பலப்படுத்தியிருக்கின்றனவாம். அந்த அறிக்கை கூறுகின்றது.

அதில் ஒரு கட்சி சுரேஸ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ். இது கூட்டமைப்பில் ஏற்கனவே அங்கம் வகித்த கட்சி. கூட்டமைப்பைவிட்டு தமிழ் அரசுக் கட்சியின் மேலாதிக்கத்தை ஏற்கமுடியாது என்று காரணம்கூறி ஏற்கனவே வெளியேறிய கட்சி. எனவே தமிழ் அரசுக் கட்சி வெளியேறாத நிலையில் அந்தக்கட்சி உள்ளேவந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. மற்றொன்று தமிழ்த் தேசியக் கட்சி. இது ரெலோவின் தலைமைத்துவம் தவறானது, அது மற்றவர்களுக்கு இடங்கொடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டிக்கொண்டு வெளியேறிச் சென்ற அணியினருடையது. ரெலோ தலைமையை ஒருவேளை செல்வம் அடைக்கலநாதன் விட்டுக் கொடுத்திருந்தால் சட்டத்தரணி சிறிகாந்த ஒருவேளை அந்தக் கட்சியை விட்டு வெளியேறாமல் இருந்திருக்கக் கூடும். (எல்லோருக்கும் தங்கள் தங்கள் தலைமைக் கதிரையை பெவிக்கோல் போட்டு ஒட்டி வைத்திருக்கவேண்டும், ஆனால் அடுத்தவருடைய தலைமைக் கதிரையில் பங்குவேண்டும்). சம்பந்தனை நோக்கி சுட்டுவிரல் நீட்டும் முன்பு செல்வம் அடைக்கலநாதன் ஒரு தடவை தனது கட்சியையும் சிறிகாந்தா, சிவாஜிலிங்கத்தையும் எண்ணிப் பார்த்திருக்கலாம்.

ஆக மொத்தத்தில் ஒரேயொரு புதுக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி மட்டும்தான் இந்தக் கூட்டுக்குள் புதிதாக வந்திருக்கும் கட்சி. அந்தக் கட்சியும்கூட கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் பட்டியலில் தங்கள் சார்பானவர்களின் பெயர்களையும் சேர்த்துக்கொண்டு போட்டியிட்ட கட்சிதான். இப்போது அதற்கு ஏனைய தலைவர்களுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதற்கு மேலே வேறு எந்தப் புதிய மாற்றமும் இந்தக் கூட்டில் நடந்துவிடவில்லை.

இந்த நிலையில் 5 கட்சிகளைச் சேர்ந்த கூட்டு என்று கூட்டமைப்பைக் காட்ட முற்படுவதே ஒரு பம்மாத்து. அப்படிப்பார்த்தால் இந்தக் கூட்டு நாளை 10 கட்சிகள் கூட்டாக ஏன் 100 கட்சிகள் கூட்டாக்கூட விருட்சமாக வளரும் சாத்தியங்கள் உண்டு. ஏனென்றால் ஒவ்வொரு கட்சிக்குள்ளும் தலைமைக்கு ஆசைப்படுபவர்கள் வரும்போதெல்லாம் அவர்கள் அந்தக் கட்சியிலிருந்து வெளியேறி தனிக் கட்சி அமைத்துவிட்டு பின்னர் புதிய கட்சியாக தனது கட்சித் தலைவருக்கு நிகரான மதிப்போடு கூட்டமைப்புக்குள் திரும்பி வருவார். அப்படி இன்றைய 5 கட்சிகளும் நாளையே 10 ஆகும். பின்னர் பத்து 100 ஆகும். வாழ்த்துக்கள்.

இப்போதைக்கு இந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு மக்கள் ஏன் வாக்களிக்கவேண்டும் என்றும் அவர்கள் காரணம் கூறியிருக்கிறார்கள்.

அதில் முதலாவது இனியொருபோதும் தனியாக யாரும் முடிவெடுக்க மாட்டார்கள், அனைத்து முடிவுகளும் 5 கட்சிகளில் இருந்தும் தலா 3 உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படும் தலைமைத்துவச் சபையால் மட்டுமே எடுக்கப்படும்.

இரண்டாவது அனைத்துத் தரப்பும் ஓரணியில் திரளவேண்டும் (அது தமிழ் அரசுக் கட்சியைத்தான் மறைமுகமாகக் குறிக்கும்) என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதற்காக இந்தக் கூட்டணிக்கு வாக்களிக்கவேண்டும்.

இப்போது இந்தக் கூட்டுக்குள் இருப்பவர்கள் எல்லோரும் முன்னர் தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆயுதம் தூக்கிப் போராடியவர்கள். பற்றுறுதி மிக்கவர்கள், மக்களின் நேர்மையான பிரதிநிதிகள். மக்களை விட்டுக்கொடுக்காமல் மக்களை முன்னிலைப்படுத்தியே இனி செயற்படுவார்கள், அதனால் வாக்களிக்க வேண்டும்.

இந்தக் காரணங்களுக்காத்தான் மக்களை வாக்களிக்கக் கேட்கிறார்களே தவிர, என்ன தீர்வு அல்லது தீர்வுக்கான வழி என்ன என்ற ஒன்றும் அந்த அறிக்கையில் கிடையாது. சரி அவர்களுக்கே தெரியா விடயத்தை அவர்களிடம் வலிந்து கேட்பது நியாயமாக என்று நீங்கள் என்னைத் திட்டுவது கேட்கிறது, போய்விட்டுப் போகட்டும்.

முதலாவது, 5 கட்சிகளைளும் சேர்ந்த தலைமைத்துவச் சபை என்று சொல்கிறீர்களே அதன் உறுப்பினர்கள் யார்? உங்கள் கூட்டணி அறிவிக்கப்பட்டு 2 மாதங்கள் ஆகிறது அந்தத் தலைமைத்துவச் சபை எத்தனை தடவைகள் கூடியது? அது என்னென்ன விடயங்கள் குறித்து ஆராய்ந்தது? குறைந்தது உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பாளர் தெரிவு, தேர்தலை எதிர்கொள்ளும் வியூகம் குறித்து அந்த தலைமைத்துவச் சபை பேசிய விடயங்களின் அறிக்கையை உடன் பகிரங்கப்படுத்த முடியுமா? அந்தத் தலைமைத்துச் சபையின் விவரங்களை ஏன் இன்னும் இரகசியமாகவே வைத்திருக்கிறீர்கள்? இலங்கையின் சுதந்திர தினத்தைப் புறக்கணிப்பது, அதன் யாழ்ப்பாணக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதில்லை என்கிற முடிவுகளை இந்தத் தலைமைத்துவச் சபை எப்போது கூடி முடிவெடுத்தது? அந்த முடிவை மீறி யாழ்ப்பாண கலாசார மண்டபத் திறப்பு விழாவில் பங்கேற்ற செல்வம் அடைக்கலநாதனுக்கு எதிராக இந்தத் தலைமைத்துவச் சபை என்ன நடவடிக்கை எடுத்தது? அல்லது அது எப்போதுகூடி அவர் மீது நடவடிக்கை எடுக்கும்?

இரண்டாவது, அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் திரளவேண்டும் என்பதற்காக வாக்களிக்கக் கோருகிறீர்களே அமைச்சர் டக்ளஸ் (அவரும் முந்தி விடுதலை இயக்கம் நடத்தினவர்தான்), நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் போன்றோரையும் இன்னும்பிற கொழும்புக் கட்சிகளோடு சேர்ந்தியங்குபவர்களையும் உங்கள் அணியில் சேர்த்துக் கொள்வீர்கள் என்பதற்காகவா தமிழ் மக்கள் உங்களுக்கு வாக்களிக்க வேண்டும்? அல்லது தமிழ் அரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளை மட்டும்தான் அனைத்துக் கட்சிகளும் என்று கருதுகிறீர்களா? அப்படிக் கருதினால் அவைதான் உங்களை வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டுப் போய்விட்டனவே அதன் பின்னர் நீங்கள் ஏன் அவற்றின் பின்னால் போக விரும்புகிறீர்கள்? எல்லோரும் சேர்ந்தால் அதிக ஆசனங்கள் கிடைக்கும் என்ற காரணத்துக்காகவா? அப்படி இதுவரை தேர்தல் கூட்டணிகளை அமைத்து நீங்கள் அதிக ஆசனங்களைப் பெற்று தமிழ் மக்களுக்கு எதைப் பெற்றுக்கொடுத்துவிட்டீர்கள்?

நீங்கள் எல்லோரும் மக்களுக்காக ஆயுதம் தூக்கிப் போராடியவர்கள், அதில் பற்றுறுதி மிக்கவர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது உண்மை. அதேபோன்று நீங்கள் அனைவரும் ஒரு கட்டத்தில் தமிழர்களுக்கு எதிரான சிங்களப் பேரினவாத அரசுகளோடு கூட்டுச் சேர்ந்து நின்றவர்கள் என்பதும் முழு உண்மைதானே? இந்த இரு முழு உண்மைகளில் எந்த உண்மை பெரியது என்று மக்கள் சீர்தூக்கிப் பார்ப்பதற்கான வழிகாட்டல் வரைபடம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா? இருந்தால் சொல்லவும். நீங்கள் சொல்வதைப் போலவே போராடப்புறப்பட்ட நீங்கள் எல்லோரும் மக்களுக்கு தங்கொணா துன்பங்களையும் இழப்புக்களையும் பரிசளித்ததற்கு மேலாக அவர்களுக்கு ஏதாவது ஒன்றைத்தன்னும் பெற்றுக் கொடுத்திருக்கிறீர்களா? அவர்களின் வலிகளுக்காவது மருந்திட்டிருக்கிறீர்களா? அரசின் போர்க் குற்றங்கள் குறித்துப் பேசும் நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் கட்சிகளும் செய்த குற்றங்களுக்காக, பாவங்களுக்காக இந்த மக்களிடம் மனம்விட்டு ஒரு மன்னிப்பாவது கேட்டிருக்கிறீர்களா? மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள். எடுத்துக் கொண்ட பாதையில் இலக்கை அடையும் வரையும் நடக்காமல் பாதியில் விட்டுவிட்டு வன்முறையற்ற வழி என்று தப்பித்தவர்கள்தானே நீங்கள் எல்லோரும்? அப்படி இப்போதும் இடைவழியில் விட்டுவிட்டு ஓடிவிடமாட்டீர்கள் என்று உங்களை எப்படி நம்பச் சொல்கிறீர்கள்?

இங்கே யாரும் புனிதராக இருந்த

(11ஆம் பக்கம் பார்க்க)






# மிகவும் சூடு சுரணையுள்ள விலை போகாத தலைவர்!

## பிரபாகரன் தொடர்பில் ஸ்ரீநேசன் பெருமிதம்



தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் மிகவும் ஒரு சூடு சுரணை உள்ள தலைவர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் விலை போகின்ற ஒருவராக இருக்கவில்லை.

மட்டக்களப்பில் இலங்கை தமிழரசு கட்சியின் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பிரசார செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த போது, பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்ற கருத்து தொடர்பாக வினவியதற்கே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடாந்தும் கருத்துத் தெரிவித்த அவர் –

'தலைவர், யுத்த களத்தில் தனது மூன்று தலைமுறைகளை இழந்து இருக்கின்றார். அவ்வாறான நிலையில், பழ நெடுமாறன் கூறியிருக்கும் கருத்தை எடுத்தவுடன் நாங்கள் தட்டி விட முடியாது. இருந்தாலும் இந்தக் கருத்தின் பின் அரசியல் இருக்கின்றதா அல்லது புலனாய்வு விடயங்கள் இருக்கின்றனவா என்று சந்தேகம் எழுகின்றது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் 13 ஆம் திருத்தச் சட்ட நகலை பௌத்த மத குருமார்கள் எரித்தார்கள். இந்த நிலையில் ஜனாதிபதி 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் ஏற்பாடுகளை முன்னெடுத்தால் நாடு முழுவதும் பாரிய ஆர்ப்பாட்டங்கள் வெடிக்கும் என்ற ஒரு கருத்தை அவர்கள் முன் வைத்திருக்கின்றார்கள்.

இது பழைய புராணம் அல்லது பழைய குருடி கதவை திறவடி என்று கூறுவார்கள். சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து தற்போது வரை மிக மோசமான சிங்கள பௌத்த அடிப்படைவாதம் இந்த நாட்டை சீர்குலைத்து இருக்கின்றது.

இன்று இந்த நாடு பொருளாதாரத்தில் அதள பாதாளத்துக்குள் சென்றிருக்கின்றது. இதற்கு காரணம் இனவாதம், மதவாதம். தமிழ் மக்களினுடைய பிரச்சினை தீர்க்கப்படாத காரணத்தால் தொடர்ந்தும் இந்த நாடு இந்தப் பிரச்சினைக்கு தள்ளப்பட்டு கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படுமாக இருந்தால் நாட்டைக் காட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படும்.

பௌத்த சிங்கள அடிப்படை வாதத்தை அரசியல்வாதிகள் கையாண்டு கொண்டிருக்கின்றார்கள். பண்டா – செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவதற்கும், டட்லி – செல்வா ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கும் கூட இவர்கள்தான் காரணமாக இருந்தார்கள்.

13 ஆவது அரசியல் யாப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் தடையாக இவர்கள் தான் இருக்கின்றார்கள். உள்நாட்டுப் பொறுமுறையால் அல்லது உள்நாட்டு அரசாங்கத்தால் இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய வாய்ப்பு இலங்கையில் இல்லை. சர்வதேச பொறிமுறை மூலமாக சர்வதேச மத்தியஸ்தம் மூலமாக இந்த நாட்டின் பிரச்சினை தீர்க்கப்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பாக ஜனாதிபதியின் நகர்வை எவ்வாறு பார்க்கின்றீர்கள் என வினவிய போது –

'எதுவும் உண்மையில்லை ஏமாற்றுகின்ற வித்தையாகவே காணப்படுகின்றது. ஜனாதிபதி கூறுகின்றார் பிரச்சினையைத் தீர்க்கப் போகின்றோம் என்று. அடுத்த கட்டமாக பிக்குகள் ஏவி விடப்பட்டவர்கள் போன்று நாடாளுமன்றத்துக்கு வெளியே 13 ஆம் திருத்த சட்டத்தைக் கொளுத்தி விடுகின்றார்கள்.

இந்த நாட்டில் பௌத்தகுருமார்களுக்கு எதிராக சட்டம் பாய்வதில்லை. எதை செய்தாலும் கௌரவமான அந்தஸ்துள்ள தலைவர்களாக மதிக்கப்படுகின்றார்கள். எனவே அந்த குழப்பகாரர்கள் இருக்கும் வரைக்கும் இந்த நாட்டில் சாந்தியோ சமாதானமோ அல்லது சர்வ மாதங்கள் ஒன்றாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாகாது.

ரணில் அடுத்த முறையும் தான் அதிபராக வரவேண்டும் என்பதற்காக பொய்யான வார்த்தைகளைக் கூறிக் கொண்டிருக்கின்றார். ஆனால் அவற்றை தீர்ப்பதற்கான ஆளுமை சக்தி அவரிடம் இல்லை.

'மேலும் மரத்தால் விழுந்தவனை மாடு முட்டுவது போல் மக்களிடம் வருமானம் வற்றிப் போய் கிடக்கின்றது. வருமானம் இல்லாத நிலையில் வரிகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

அரசியல் அறிவில்லாமல் – பொருளியல் அறிவில்லாமல் – கோட்டாபய ராஜபக்ஷவால் செல்வந்தர்கள் மீது விதிக்கப்பட்ட வரிகளை விலக்கிவிட்டதன் காரணமாக அரசுக்கு 60 ஆயிரம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டு இருக்கின்றது.

சீனி இறக்குமதியில் தங்களுடைய நண்பர்களுக்கு சலுகைகள் கொடுத்தமையால் 1600 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டு இருக்கின்றது. இவ்வாறு வெங்காயம், சீனி, எண்ணெய் எல்லா இறக்குமதிகளிலும் தரகு பணம் அடிக்கின்ற செயற்பாட்டுடன் அரசு செய்வதால் முழு கடன் சுமையும் மக்களின் தலையில் பாய்ச்சப்படுகின்றது.

இதனால் மின்சார சபைக்குரிய வரிகளை அதிகரிப்பதன் மூலமாக மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்கி மிக மோசமான போராட்டத்தில் ஈடுபடுவதற்குரிய வாய்ப்பை அளிக்கின்றார்கள். – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த முறையைப் பார்க்கிலும் இந்த முறை அதிகளவான மக்கள் தமிழரசு கட்சிக்கு வாக்களிப்பதற்கு ஆயத்தமாக உள்ளனர். அரசாங்கத்தை பொறுத்தவரையில் தேர்தலை வைப்பதற்கான மனநிலை அவர்களிடத்தில் இல்லை.

மொட்டுக் கட்சி மற்றும் யானை கட்சியை எடுத்துக் கொண்டால் இந்த தேர்தலில் படுதோல்வியை அடைவார்கள் என்ற காரணத்தால் இந்தத் தேர்தலை தள்ளி வைப்பதற்கு பார்க்கின்றார்கள்.

எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்காகவும் மக்கள் அனைவரும் தேர்தலுக்குத் தயாராக இருக்கின்றார்கள். சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திர தினம் கொண்டாடுகிறார்கள். நீதி இல்லாத நாட்டில் நீதி அமைச்சர் இருக்கின்றார். தேர்தலை அரசாங்கம் தள்ளிப் போடுகின்ற போது அரசாங்கத்தின் செல்வாக்கு குறையுமே தவிர கூடாது எனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தீர்வு என்பது சில சலுகைகள்தானா?

**பொருளாதார நெருக்கடிகளில் இருந்து இலங்கை மீள்வதற்கு கொழும்பு அரசுக்குத் தமிழ் மக்களுடன் சமரசம் செய்துகொள்ளவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இருக்கின்றது என்கிற நம்பிக்கை அல்லது ஆழமான உணர்வு தமிழ் அரசியல் பரப்பில் உள்ளது. இதனை மீளாய்வு செய்ய வேண்டிய தேவை, அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.**

**தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளைத் தான் இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்பாக எடுப்பார் என்று அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தாமாகே முன்வந்து அறிவித்த போது, அது இத்தகைய நெருக்கடியின் ஓர் விளைவு என்றே கருதப்பட்டது.**

**இலங்கை பன்னாட்டு நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் கடன் உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அந்தக் கடன் உதவி அதற்கு இன்றியமையாதது. அதனாலேயே பெரும் பிரயத்தனத்திற்கு மத்தியில் மின்சாரக் கட்டணத்தைக்கூட அது தற்போது பல மடங்குகளாக அதிகரித்துள்ளது. நாணய நிதியம் மனித உரிமைகள் விடயத்திலும் விடாப்பிடியான நிபந்தனைகளைக் கொண்டிருக்கும் என்பதால் தமிழர்களுடன் சமரசம் செய்வது ரணிலுக்குத் தவிர்க்க முடியாதது என்பது தமிழ் அரசியல் பரப்பின் எதிர்பார்ப்பு.**

**அதேபோன்றே தற்போதைய நெருக்கடி நிலையில் இந்தியாவின் பேருதவியும் கொழும்புக்கு அவசியமாக இருப்பதால் தமிழர்கள் குறித்த புதுடில்லியின் அணுகுமுறைக்கு அணுக்கமாகக் கொழும்பு நடந்துகொள்ளும், அது தமிழர்களுக்குச் சாதகமாக இருக்கும் என்பதும் மற்றொரு எதிர்பார்ப்பு.**

**அதற்கேற்ற வகையில் ரணில் விக்கிரமசிங்கவும் சில காய்களை நகர்த்தினார். தீர்வு பற்றி சுதந்திர தின அறிவிப்பு பின்னர் நாடாளுமன்றத்தில் கொள்கை விளக்க உரை என்பன அவற்றில் தமிழர்களுக்கு எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திய நகர்வுகள். ஆனால் அவற்றினால் விளைந்தவை என்ன?**

**எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று தீர்வு குறித்த எந்தவொரு அறிவிப்பும் ரணிலால் வெளிப்படுத்தப்படவில்லை. குறைந்தபட்சம் அதைச் செய்ய முடியாவிட்டால் அதை வெளிப்படுத்துவேன் என்று முன்னர் கூறியிருந்தார். அதைக்கூட அவர் செய்யவில்லை. அதுபோன்றே அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் விடயமும். அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று அனைத்துக் கட்சிக் குழுக்கூட்டத்தில் கடும்போக்காளர்களைத் தூண்டிவிடும் வகையில் வீறாப்புக் காட்டிய ரணில், பிக்குகளின் எதிர்ப்புக்கள் உள்ளிட்ட பௌத்த சிங்கள எதிர்ப்புகள் வெளிப்பட்டதும் அமைதியாகிவிட்டார். இப்போது அதைப் பற்றிய எந்தக் கதையும் இல்லை.**

**தான் வாக்குறுதியளித்தவற்றில் 108 ஏக்கர் காணிகளை விடுவித்ததையும் 4 அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கியதையும் தவிர வேறு எதுவும் நடக்கவில்லை. இந்த இரு விடயங்களிலும்கூட நிறைவேற்றப்படவேண்டியுள்ளவை எவ்வளவோ இருக்க மிகச் சொற்பமான அளவிலேயே விடயங்கள் நடந்திருக்கின்றன. தமிழர் தரப்பில் வலியுறுத்தப்பட்டதற்காக வழங்கப்பட்ட சில சலுகைகள்தான் இவையே தவிர வேறில்லை.**

**ஆக மொத்தத்தில் எந்தவிதமான பன்னாட்டு நெருக்கடிகளும், பொருளாதார நெருக்கடிகளும் மட்டும் கொழும்பை தமிழர்கள் விடயத்தில் நியாயமான வழிக்குக் கொண்டு வரும் என்று எதிர்பார்ப்பது போதுமானதல்ல. அது தமிழ் மக்களின் அரசியல் விடுதலையை விரைவுபடுத்தப் போவதுமில்லை. புதிய வழிகளும் புதிய முயற்சிகளும் கொண்டு தமிழர் அரசியல் நகரவில்லையாயின் ஒரு சில சலுகைகள் மட்டுமே தமிழர்களுக்கான தீர்வு என்றாகிவிடும் நிலையைத் தவிர்க்க முடியாததாகிவிடும்.**

# தேர்தல் நெருக்கடி நீடிக்கிறது

## நிதி விடுவிப்பு குறித்த கலந்துரையாடல் நேற்றும் இல்லை

உள்ளூராட்சிசபைகளுக்கானதேர்தலை நடத்துவதற்குத் தேவையான பணத்தை விடுவிப்பது தொடர்பான நெருக்கடி தொடர்கின்றது. இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் திறைசேரியின் செயலாளருக்கும் இடையில் நேற்று நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட பேச்சுக்கள் நடக்கவில்லை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதியை விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாட நேற்று ஆணைக்குழுவிற்கு வருகை தருமாறு திறைச்சேரியின் செயலாளர், நிதியமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதும் எவரும் வரவில்லை என்று ஆணைக்குழு தெரிவித்தது.

பணம் வழங்கப்படாத காரணத்தால் வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகளை அரச அச்சகம் நிறுத்திவிட்டது. இதனால் திட்டமிட்டபடி தபால் மூல வாக்குகளை விநியோகிக்கும் நடவடிக்கை உரிய காலப் பகுதியில் தொடங்கப்படவில்லை. அரசு பணத்தை விடுவிக்காத வரையில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழி வகை இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

முதற்கட்டமாக தபால்மூல வாக்களிப்பிற்கான வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்கான பணத்தை விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடவே நிதிசார் உயர் அதிகாரிகளை ஆணைக்குழு அழைத்திருந்தது. எனினும் அந்தச் சந்திப்பு நடைபெறவில்லை.

இதனால் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடக்குமா இல்லையா என்கிற கேள்வி தொடர்கின்றது.

வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கு 400 மில்லியன் ரூபாய் தேவை. தேர்தல்கள் ஆணைக்குழு 40 மில்லியன் ரூபாய் மட்டுமே வழங்கியுள்ளது. குறைந்தபட்சம் 200 மில்லியன் ரூபா முற்பணத்தை வழங்கினால் மட்டுமே பணிகளை முன்னெடுக்க முடியும் என்று அரச அச்சகத் திணைக்களத் தலைவர் பிடிவாதமாக இருக்கிறார். இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுவது சாத்தியமற்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதையடுத்து இவ்வாரத்திற்குள் தேர்தல் தொடர்பான தீர்க்கமான ஒரு முடிவு எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# தமிழர்களுக்கான தீர்வை வழங்குவதற்கு திராணியற்றவர்களே சிங்கள தலைவர்கள்!

## சிறீதரன் எம்.பி. காட்டம்



சிங்களத் தலைவர்கள் யாரும் தமிழ் மக்களுக்கான ஓர் அரசியல் தீர்வை முன்வைக்க திராணியற்றவர்களாகவே இருக்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

யாழ். நெடுந்தீவு பகுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

இந்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

கடந்த காலத்தில் நோர்வே அனுசரணையில் இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் ஜெனிவாவில் பலகட்ட பேச்சுக்கள் நடைபெற்றன.

அவை அனைத்தும் தமிழர்கள் கொண்டிருந்த ஆயுத பலத்தை மையமாகக் கொண்டே நடைபெற்றுள்ளன.

அந்தக் காலப்பகுதியில் நாங்கள் ஒரு பலமான சக்தியாக இருந்தோம். அப்போது எல்லோரும் எங்களைத் திரும்பிப் பார்த்தனர்.

நெடுந்தீவு பகுதி தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு பிரதேசமாகக் காணப்படுகிறது.

இப்போதும் பல பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டு தமிழர்கள் சுதந்திரமாக வாழ முடியாத நிலையில் காணப்பட்டதோடு கடந்த காலங்களில் ஈ.பி.டி.பியினர் பெரும் அநியாயங்களை செய்தனர்.

நாங்கள் இந்த பிரதேசங்களில் காலடி வைக்க முடியாத பகுதியாக இருந்தது.

நாடாளுமன்ற தேர்தலுக்காக வந்தபோது தம்பட்டி பகுதியில் வைத்து இரண்டு பேர் படுகொலை செய்யப்பட்டனர் என குறிப்பிட்ட அவர், கடந்த 2011 ஆம் ஆண்டில் ரணில் நெடுந்தீவுக்கு வந்த போது இரு சக்கர வண்டியிலேயே பயணித்தார். ஆனால் இன்று அவர் ஜனாதிபதியாக வந்துள்ளார் என சுட்டிக்காட்டியுள்ளார்.

## வன்முறைகளை ......

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட வேண்டும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார் எனவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் கடல் வளத்தினை அழிக்கும் இந்திய மீனவர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இராஜதந்திர ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் குறித்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், அவை போதுமானளவு பயனளிக்காத நிலையில்,

அண்மைக்காலமாக தொடர்ச்சியாக இந்தியத் தலைவர்களுடன் இதுதொடர்பாக கலந்துரையாடி வருகின்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் மற்றும் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த இந்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் எல். முருகன், பாரதிய ஜனதா கட்சியின் தமிழ் நாடு மாநில தலைவர் கு.அண்ணாமலை ஆகியோருடனும் இது தொடர்பாகப் பேசி இருந்ததுடன், விரைவில் புதுடெல்லி மற்றும் தமிழகத்தின் மேலும் பல உயர் மட்டத் தலைவர்களையும் சந்தித்து பேச்சு நடத்தவும் திட்டமிட்டிருக்கிறார்.

இவ்வாறான சூழலில், இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் சடுதியாக அதிகரித்துள்ளதாக கவலை வெளியிட்டுள்ளதுடன், பொலிஸாருக்குத் தேவையான ஆலோசனைகளையும் அமைச்சர் வழங்கியுள்ளார் – என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# இடைக்கால தடை

மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தொடர்பில் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அவருக்கு விடுக்கப்பட்ட அழைப்பாணையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு இடைக்கால தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் கோட்டை நீதிவானுக்கு இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும், குறித்த முறைப்பாட்டை விசாரணை செய்வதற்கும் இடைக்கால தடை விதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவு 14 நாள்களுக்கு செல்லுபடியாகும் என பிரதிப் பொலிஸ் மா அதிபர் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பந்துல கருணாரத்ன மற்றும் ஆர். குருசிங்க ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு நேற்று (வியாழக்கிழமை) பரிசீலிக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# மலையக வீடமைப்புத் திட்டம் குறித்து இந்திய அதிகாரிகளுடன் கலந்தாய்வு!



இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின்கீழ் மலையகத்தில் முன்னெடுக்கப்படும் வீடமைப்புத் திட்டம் சம்பந்தமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் மூவர் கலந்துகொண்டனர்.

அத்துடன், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், திட்டமிடல் பிரிவு அதிகாரிகள், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர், புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் ஆகியோரும் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

மலையக மக்களுக்காக இந்தியா வழங்கிய 4 ஆயிரம் வீடுகள் திட்டத்தில் ஒரு சில பகுதிகளில் வீடமைப்புத் திட்டம் இன்னும் முழுமைப்படுத்தப்படாமல் உள்ள நிலையில், அவற்றைப் பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் சம்பந்தமாக, இந்திய தூதரக அதிகாரிகளுக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்போது விளக்கமளித்தார்.

அத்துடன், இலங்கையின் தற்போதைய பொருளாதார சூழ்நிலைக்கமைய, முன்னதாக மதிப்பீடு செய்யப்பட்டதன் பிரகாரம் 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை முன்னெடுக்க முடியாதநிலை காணப்படுவதால், மேலதிகமாகத் தேவைப்படும் உதவிகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

முதலில் 4 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை முழுமைப்படுத்திய பின்னர், 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை ஆரம்பிப்பது சம்பந்தமாகவும், பயனாளிகள் தேர்வு தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

அத்துடன், தொண்டமான் தொழில்பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகள், ஸ்மார்ட் வகுப்பறை திட்டம் தொடர்பாகவும் இரு தரப்புக்குமிடையில் கருத்தாடல்கள் இடம்பெற்றன.




# உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று மீட்பு

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரகரி வாவியிலிருந்து நேற்று மாலை ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டது என்று நுவரெலியா பொலிஸார் தெரிவத்தனர்.

சடலமொன்று மிதப்பதைக் கண்டு பிரதேசவாசிகள் நுவரெலியாப் பொலிஸாருக்கு அறிவித்தனர். அதன்பின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட சடலம் இதுவரை யாருடையது என அடையாளம் காணப்படவில்லை.

சடலம் உருக்குலைந்த நிலையில் இருப்பதால் அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த நபர் வாவியில் பாய்ந்து உயிரிழந்தாரா அல்லது எவராவது கொலை செய்துவிட்டு வாவியில் வீசிவிட்டுச்சென்றார்களாஎன்பது தொடர்பில் பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# வீதியில் செல்கையில் மயங்கி வீழ்ந்த முதியவர் இறப்பு

தென்மராட்சி, பெப். 17

சாவகச்சேரி கச்சாய் வீதியில் 15/02 புதன்கிழமை மதியம் வீதியால் மிதிவண்டியில் சென்றுகொண்டிருந்த முதியவர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இதில் சாவகச்சேரி கச்சாய் வீதியை சேர்ந்த 72 வயதான தெய்வேந்திரம் என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# நாடு அராஜக பாதையில் செல்வதை தடுப்பது எதிர்க்கட்சி உள்ளிட்ட சக்திகளின் பொறுப்பு!

## கரு ஜயசூரிய சுட்டிக்காட்டு



நெருக்கடிகள் மத்தியில் நாடு அராஜக பாதையில் செல்வதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது எதிர்க்கட்சி உள்ளிட்ட அரசியல் சக்திகளின் பொறுப்பாகும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர் விடுத்திருக்கும் அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது உருவாகியிருக்கும் சிக்கல்களை சரியாக மதிப்பிட்டு, உருவாகிக்கொண்டிருக்கும் எதிர்மறை சூழ்நிலைகளை மேலும் வளர விடாமல் இருப்பது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும் என அவர் இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கும் பாரதூரமான நெருக்கடிகளைச் சரியாக மதிப்பீடு செய்து, பொது இணக்கப்பாட்டின் ஊடாக, மக்களின் இறையாண்மை அதிகாரத்தை சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மக்கள் ஆணையின் ஊடாக சிறந்த ஆட்சிக்கு வழிவகுக்கும் தேர்தலுக்குத் தாமதமின்றி பிரவேசிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

# உள்ளூராட்சி தேர்தலை நடத்தாவிடின் நாட்டில் ஜனநாயக நெருக்கடி ஏற்படும்

## முன்னாள் எம்.பி. மு.சந்திரகுமார் கூறுகிறார்




நாடு அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் நடத்தாதுவிடின் அது ஜனநாயக நெருக்கடியையும் ஏற்படுத்தும் என சமத்துவக் கட்சியின் பொதுச்செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களைத் திட்டமிட்ட காலத்தில் நடத்த வேண்டும்.

அதுவே மக்களின் ஜனநாயக உரிமைகளை மதித்துப் பாதுகாப்பதாக அமையும். அதுவே மக்களுடைய எதிர்பார்ப்புமாகும். தற்போது வெளிவரும் செய்திகள் தேர்தல் நடக்குமா இல்லையா என்ற கேள்வியையும் குழப்பத்தையும் மக்களிடையே உண்டாக்கியுள்ளன.

அரசமைப்பின் பிரகாரம், மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் உரிமையும் அதிகாரமும் மக்களுக்குண்டு. அதனை மறுக்கும் அல்லது தாமதப்படுத்தும் நடவடிக்கைகள் ஏற்கமுடியாதவையாகும். நாடு அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் சூழலில் தேர்தலை நடத்தாமல் தவிர்ப்பதன் மூலம் ஜனநாயக நெருக்கடியையும் உருவாக்கக் கூடாது.

ஜனநாயகச் சூழலை மேம்படுத்துவதன் மூலமே மக்களின் உரிமைகளைப் பேணுவதுடன் அனைத்து நெருக்கடிகளிலிருந்தும் மீளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இலங்கை - இந்தியா இடையிலான மின் பரிமாற்ற ஒப்பந்தம் விரைவில்

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் மின்சார கட்டமைப்புகளை இணைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இரண்டு மாதங்களுக்குள் கையெழுத்திடப்படும் என இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் மின்சார கட்டமைப்புகளை ஒன்றிணைக்கும் உடன்படிக்கையை எற்படுத்திக்கொண்டதன் பின்னர் செயலாக்க ஆய்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஒரு தசாப்தத்துக்கு முன்னதாக முன்மொழியப்பட்ட இந்தத் திட்டம் இதுவரை சிறிய அளவிலான முன்னேற்றத்தையே எட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குள் மின் கட்டமைப்பை உருவாக்கி, இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை இந்தியாவிற்கு விற்பனை செய்ய முடியும் என இலங்கை நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மோ. சைக்கிள் கொள்ளையர் இருவர் பொலிஸாரால் கைது

தங்க ஆபரணங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய, நீதிமன்றத்தால் 11 பிடியாணைகள் பிறக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் இருவர் குற்றத்தடுப்பு பிரிவினரால் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

களுத்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சமங்கல மாவத்தை உள்ள ரயில் கடவைக்கு அருகில் குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் மோட்டார் சைக்கிளில் சென்று 10 லட்சம் ரூபா பெறுமதியான 5 தங்க சங்கிலிகள் கொள்ளையிட்டமை தொடர்பில் நீதிமன்றத்தால் 11 பிடியாணைகள் பிறக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு பயகால பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 26 மற்றும் 32 வயதுடைய உனவட்டுன மற்றும் களுத்துறை தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

குறித்த சந்தேகநபர்கள் பயாகல, மொரந்தொட்டுவ, அகலவத்த, பதுரலிய மற்றும் மித்தெனிய பொலிஸ் பிரிவுகளில் பல்வேறு தங்க நகை கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களாவர். அவர்களிடமிருந்து 31 கிராம் 190 மில்லி கிராம் நிறையுடைய தங்க நகைகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சந்தேக நபர்கள் தங்க நகைகள் மற்றும் மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்பில் மாத்தறை, காலி, அவிஸாவளை, மதுகம, களுத்துறை, கலவான, வெல்லவாய வலஸ்முல்ல, தெய்யந்தர நீதிமன்றங்களால் பிடியாணை பிறக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# கப்ராலுக்கு விதிக்கப்பட்டுள்ள பயணத்தடை நீடிக்கப்பட்டது!



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் தென் மாகாண ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோனால் சமர்ப்பிக்கப்பட்ட மனு நேற்று (வியாழக்கிழமை) கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி வரை குறித்த தடை நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகக் கடமையாற்றிய போது, அஜித் நிவார்ட் கப்ரால் பொது நிதியை துஷ்பிரயோகம் செய்தார் எனக் குற்றம் சுமத்தி இந்த தனிப்பட்ட மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் பாதுகாப்பு இன்மையால் அச்சீட்டுப் பணிகளுக்கு இடையூறு

## காரணம் கூறுகின்றார் அரச அச்சகர்

போதிய பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படாமையால், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான அச்சீட்டுப் பணிகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது என்று அரச அச்சகர் கங்கானி கல்பனி லியனகே தெரிவித்தார்.

தேர்தலுக்குத் தேவையான அச்சுப்பணிகளுக்குப் பொலிஸ் பாதுகாப்பு அவசியம் தேவைப்படுவதாக ஊடகங்களிடம் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்பான முறையில் அச்சிடும் செயற்பாட்டை முன்னெடுப்பதற்குக் குறைந்தபட்சம் 65 பொலிஸாரேனும் தேவைப்படுகின்றனர்.

பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படாமையால், பாதுகாப்புத் தரப்பினரை ஈடுபடுத்தி அச்சிடும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முயற்சித்தாலும், அச்சக சேவையாளர்கள் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை - என்றார்.



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# சும்மா இருந்த சங்கை...

## அக்க ரை/றை அலசல்



என்.சத்தியமூர்த்தி

விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார், என்று சொல்லப்படுவதில் எந்தப் புதுமையும் இல்லை. கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் அவர் போரில் கொல்லப்பட்டதாக இராணுவம் அறிவித்ததில் இருந்தே இத்தகைய வதந்திகள் வேண்டுமென்றே பரப்பப்பட்டு வருகின்றன. அது, பிரபாகரனை வைத்து அரசியல் மற்றும் வாழ்வு நடத்தும் புலம்பெயர்ந்தோரில் சிலருக்கும், அவரை அண்டி வாழும் தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் சிலருக்கும் பொழுதுபோக்காகவே மாறிவிட்டது என்பதுதான் வேதனை.

அதாவது, பிரபாகரன் உயிருடன் இருக்கிறார், இன்று வருவார், நாளை வருவார் என்றெல்லாம் அவர்கள் கூறி வருகின்றனர். ஏதோ, பள்ளிகூடங்களில் குழந்தைகளுக்கு, தங்களது டிரேட் மார்க் தொப்பியில் இருந்து முயலை எடுத்து காட்டும் மந்திரவாதிகள் போல் இவர்கள் செயல்படுகிறார்கள். இவர்களை பார்த்து சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை.

காரணம், பிரபாகரன் பெயரை வைத்து பிழைப்பு நடத்தும் இவர்கள் எல்லோருமே, ஒவ்வொரு முறையும் அவர் உயிருடன் இருக்கிறார் என்று புதிதாகக் கிளப்பி விடும்போது, அவருடைய பெயருக்கு இழுக்குத் தேடித் தருகிறார்கள். அதைவிட முக்கியமாக, இன்று பிரபாகரனே உயிருடன் வந்தாலும் அதனை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவரிடமே இலங்கை அரசின் தேசிய அடையாள அட்டையை காட்டுமாறு கேட்பார்கள். அந்த அளவிற்கு, அவரது பெயர் தவறாக பயன்படுத்தப்படுகிறது.

### எதிர்மறை வினை

அந்த விதத்தில், தமிழ்நாட்டில், தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நடத்திய செய்தியாளர்கள் கூட்டத்தில், பழ நெடுமாறனும், காசி ஆனந்தனும் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் எனக் கூறியது, எதிர்மறையாகவே செயல்பட்டது எனலாம். முதல் ஒன்று இரண்டு மணித்தியாலங்களுக்கு பிறகு, அந்த கூட்டம் குறித்து செய்தி வெளியிட்ட தமிழ் தொலைகாட்சி அலைவரிசைகள்கூட அது குறித்து அதிகம் கவலைபடவில்லை. மாறாக, சமூக ஊடகங்களில், அவர்களது கூற்று கேலிப்பொருளாகியது.

இதற்குக் காரணம், போர் முடிந்த காலம் தொட்டு, இவ்வாறான யூகங்களை உண்மைசெய்தியாக வெளியிட்டு மக்களை திசைதிருப்ப முயல்வோரின் கையாலாகாத்தனமே. உண்மையிலேயே பிரபாகரனோ, அல்லது அவரது மனைவி மதிவதனி மற்றும் மகள் துவாரகாவோ உயிருடன் இருப்பார்களேயானால், அவர்கள் மறைவு வாழ்க்கை வாழ்வதால், யாருக்கு என்ன லாபம்? அல்லது, அவர்களுக்கு, எல்லாம் வெறுத்து போய், அமைதியான வாழ்க்கையை நடத்தவேண்டும் என்று நினைத்திருந்தால், அதனை கெடுப்பதால்தான், யாருக்கு என்ன பயன்?

வயதும் அறிவும் முதிர்ந்த காசி ஆனந்தனுக்கும் நெடுமாறனுக்கும் இது தேவையே இல்லை. அதைவிட முக்கியமாக, பிரபாகரனுக்கும் அவர் குடும்பத்தாருக்கும்கூட இது தேவை இல்லை. இதை, யார் – யாருக்கு எப்போது, எப்படி விளங்க வைக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை.

### ராஜீவ் கொலை வழக்கு

உண்மையோ, பொய்யோ, பிரபாகரன் உயிருடனிருந்தால், இந்தியாவில் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கை, தூசி தட்டி எடுத்து, அரசு அவர் எங்கிருந்தாலும் கைது செய்ய எத்தனிக்கும். தேவை என்றால், இன்டர்போல் என்ற அறியப்படும் சர்வதேச பொலீஸின் உதவியையும் நாடும். தற்போதுள்ள சர்வதேச சூழலில், தீவிரவாதி என்ற முத்திரை குத்தப்பட்ட எவருக்குமே எந்த நாடும் புகலிடம் அளித்து அவர்களை முன்பு போலவே சுதந்திரமாக நடமாட விடமுடியாது. இது நெடுமாறன் வகையாறாக்களுக்கு தெரியாத விடயமல்ல.

இனப்போர் முடிந்து ஓரண்டு கால கட்டத்தில், இந்தியாவின் மத்திய புலனாய்வு துறை (சிபிஐ) தலைமையிலான தனிப்பட்ட விசாரணை குழு (எம்.டி.எம்.ஏ) பிரபாகரன் இறந்து விட்டார் என்றும், அவர் சார்ந்த ராஜீவ் காந்தி கொலை வழக்கை சட்டப்படி முடித்து வைத்துவிடலாம் என்றும் அதற்கான தனி நீதிமன்றத்தில் கோரியது. அந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, சென்னையை அடுத்த பூவிருந்தமல்லியில் இடம் பெற்றிருந்த நீதிமன்றமும் அவ்வாறே செய்தது.

இப்பொழுது, பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்றால், அந்த வழக்கை மீண்டும் உயிர்ப்பித்து, முன்னெடுக்க வேண்டியிருக்கும். பிரபாகரனும் தனது ரத–கஜ–துரக பதாதியினருடன் கிளிநொச்சியில் பதுங்கியிருக்கவில்லை என்ற காரணத்தால், அவரை உயிருடன் பிடிப்பது கடினமாக இருக்காது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

அதைவிட முக்கியமாக, தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே, அவர் மிக ஆழமாக, திட்டமிட்டு உருவாக்கிய மனித கவசமான, உயிரிழந்த போராளிகளின் குடும்பங்களும் அவருடன் இல்லாத சமயத்தில், அவரை அதிக உயிர் சேதம் எதுவுமின்றி கைது செய்வது ஒன்றும் பிரம்ம பிரயத்தனம் அல்ல. இதனையும் நெடுமாறனும் காசி ஆனந்தனும் உணர்ந்துதான் பேசுகிறார்களா என்பதும் தெரியவில்லை.

### காமெடி பீஸ்

எது எப்படியோ, ராஜீவ் காந்தி படுகொலை வழக்கு மீண்டும் உயிர் பெறுமேயானால், அதன் காரணமாக, நெடுமாறன் மற்றும் காசி ஆனந்தனுமே விசாரிக்கப்படுவார்கள் என்பதும் தெரிந்த விடயமே. ஆனால், தற்போது அவர்கள் கொளுத்திவிட்ட ஊசிபட்டாசும்கூட புஸ்வாணமாகி விட்டதால், இந்திய அரசும்கூட இதனை இப்படியே விட்டுவிடும் சாத்தியங்களும் உள்ளன.

இதே காரணத்திற்காக, ஜனாதிபதி ரணசிங்கே பிரேமதாசா, தமிழர் தலைவர் அமிர்தலிங்கம் முதலானோரின் படுகொலைகளுக்கும் பிரபாகரனை இலங்கை அரசு தேடலாம். ஏன், தற்போது தமிழர் தரப்பு சாடும், போர் குற்றங்களில் முதல் குற்றவாளியாக அவரை சேர்க்கவும் அரசு எத்தனிக்கலாம். அதில் ஒரு வித நியாயமும் உண்டு.

அண்மைச் செய்திகளின்படி, நெடுமாறன் – காசி ஆனந்தன் அழைப்பை ஏற்று, தஞ்சாவூர் பத்திரிகையாளர் சந்திப்பில், வைகோ, திருமாவளவன், வேல்முருகன் போன்ற தங்களை தமிழின தலைவர்களாக காட்டிக்கொள்ளும் யாருமே பங்கு பெறவில்லை. எங்கே, தாங்களும் காமெடி பீஸ் ஆகிவிடுவோமோ என்ற கவலை அவர்களுக்கு இருக்கலாம்.

அது போலவே, மூச்சுக்கு முன்னூறு தடவை பிரபாகரனின் பெயரை உச்சரிக்கும் சீமானும்கூட அவர்களுடைய இந்த அறிவிப்பை எதிர்பார்த்ததாகவோ, வரவேற்பதாகவோ தெரியவில்லை. இலங்கை இன அரசியல் மற்றும் பிரபாகரனின் பெயரை வைத்து அரசியல் செய்து வந்த தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் எவருமே, தற்போது பிரபாகரன் உயிருடன் இருப்பதாக நம்பவில்லை.

### மகிழ்ச்சி, ஆனால்...

இவர்களில் வைகோ, பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ந்த அதே தினம், அவர்களுடையது போலவே, ஒரு குறுகிய பத்திரிகை செய்தி வெளியிட்டார். அதாவது, பிரபாகரன் உயிருடன் இருப்பாரேயானால், அதனால் தான் பெருமகிழ்ச்சி அடைவேன் என்றார். அதாவது, இது போன்ற விடயம் தெரியும் வாய்ப்புள்ளவர்கள் யாருமே இதனை ஏற்றுக்கொள்ளவில்லை, அல்லது உறுதி செய்யவில்லை. தஞ்சாவூர் இருமரின் அறிவிப்பு நம்ப தகுந்ததாக இல்லை, என்பதே வைகோ கூறியதின் பொருள்.

சீமானுக்கோ, அவரது அரசியல் நிலைமை வேறு வடிவம் எடுத்து வருகிறது. அண்மை காலங்களில், தமிழ் நாட்டு தேர்தல்களில், தொகுதிக்கு சில ஆயிரம் வாக்குகள் பெற துவங்கியுள்ள அவரது நாம் தமிழர் கட்சி, அடுத்த கட்டத்தில் அடி எடுத்து வைக்க வேண்டும் என்றால், அதற்குப் பிரபாகரன் எதிர்ப்பு மற்றும் நடுநிலை வாக்களர்களின் ஆதரவும் தேவை. அதனை பெறுவதற்கு, அவர் தன்னை விடுதலை புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர் என்ற நிலையைத் தாண்டி, குறிப்பாக, தமிழ் மக்கள் மற்றும் தமிழ் நாட்டு பிரச்சினைகளை கையில் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

### வாய் மூடி மௌனி

ஏன், தமிழ் கடவுள் முருகனை தனது முப்பாட்டன் ரேஞ்சுக்கு சொந்தம் கொண்டாடுவதன் மூலம், சீமான், தன்னை ஒரு இந்து மத விசுவாசியாகவும் காட்டிக்கொண்டு வருகிறார். அந்த வகையில், எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைதேர்தலில் சீமானின் நாம் தமிழர் கட்சியும் வேட்பாளரை நிறுத்தி உள்ளது. 2021ஆம் வருடம் சட்டசபை தேர்தலில், அவரது கட்சி, பத்தாயிரத்திற்கும் அதிகமான வாக்குகளை இந்த தொகுதியில் பெற்றது குறிப்பிடத்தக்கது.

அந்த விதத்தில், நெடுமாறனின் அறிவிப்பு, இடைதேர்தலில், பிராபகரன் காலமான காலகட்டத்தில் மத்தியில் ஆண்டு வந்த காங்கிரஸ் கட்சி வேட்பாளரான ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கு எதிராகத் திரும்பும் என்று அவரது ஆதரவாளர்கள் பயந்தனர். அது போன்றே, அந்த காலகட்டத்தில் தமிழ் நாட்டின் முதல்வராக இருந்த கருணாநிதியின் திமுகவிற்கு எதிராகவும் திரும்பும் என்று கருத இடமிருந்தது. ஆனால், பிரபாகரன் குறித்து செய்தி வெளிவந்த இந்த இரண்டு, மூன்று நாட்களில் அவ்வாறான வாய்ப்புகள் இல்லை எனபது தெளிவாகி உள்ளது.

அந்த விதத்தில், நெடுமாறன் கையொப்பமிட்ட அந்த அறிவிப்பில், கருணாநிதியின் மகனும் தற்போதைய முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், தந்தையாரின் பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தை துடைக்கும் வாய்பு வந்துள்ளது என்று கோடிட்டு காட்டப்பட்டிருந்தது. அது போன்றே, இந்தியாவின் மத்தியில் ஆளும் பாரதீய ஜனதா அரசும் தனது வன்ம எதிரியான காங்கிரஸ் கட்சியை போட்டு தாக்குவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்ற ஆலோசனையும் அந்த அறிவிப்பில் இழையோடி இருந்தது. ஆனால், மத்தி மாநிலத்தில் ஆளும் இரு கட்சிகளுமே நெடுமாறன் காசி ஆனந்தன் அறிவிப்பை கண்டுகொள்ளவே இல்லை.

எப்போதுமே, திமுகவை போட்டு தாக்கும் தமிழ் நாடு பாரதீய ஜனதா தலைவர் அண்ணாமலைகூட திடீர் மௌனியாகிவிட்டார். காரணம், அவரது அண்மை கால யாழ்பாண பயணத்திற்கும் நெடுமாறன் அறிவிப்பிற்கும் முடிச்சு போட்டு சமூக வலைதளங்களில் பரபரப்பு செய்திகளும் விமர்சனங்களும் வெளியாகியதை தொடர்ந்து, அவர் இது விடயத்தில் வாய் திறக்கவில்லை.

### உடைந்த மாயை

இது இவ்வாறென்றால், இலங்கையிலும், பிரபாகரன் குறித்த செய்தி யாரோ எதிர்பார்த்தது போல் அதிர்வுகளை தோற்றுவிக்கவில்லை. தமிழர் தரப்புகளில் பத்திரிகை செய்திகள்கூட அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. தாங்களே நம்பாத ஒரு விடயத்தை, பத்திரிகை மற்றும் தொலைகாட்சி ஆசிரியர் பீடங்கள் மக்களிடம் கொண்டு சேர்ப்பது முட்டாள் தனம் என்று கருதியதாகவே தோன்றுகிறது.

எப்போதும் எகிறும் சிங்கள அரசியல்வாதிகள்கூட இப்போது அடக்கி வாசிக்கிறார்கள். போரில் பிரபாகரன் இறந்துவிட்டார் என்பதை தான் முழுமையாக நம்புவதாக பித்ரு ஹெல உருமய கட்சி தலைவர் உதய கம்மன்பில்ல தெரிவித்துள்ளார். மற்றுள்ளோர் இந்த செய்தி குறித்து பேசி, அதற்கு தென்னிலங்கையில் அதிக விளம்பரம் கிடைக்க செய்வதற்குக்கூடத் தயாராயில்லை.

என்றாலும், இனப்பிரச்சினைக்கு தீர்வு என்ற பேச்சு எழுந்த தற்போதைய காலகட்டத்தில், தென்னிலங்கை கடும்போக்கு பேரினவாதிகள், தமிழர் தரப்பிற்கான அதிகார பகிர்வை அளிப்பதனை எதிர்ப்பதற்கு, பிரபாகரனின் உயிர்ப்பித்தலையும் ஒரு காரணமாக சேர்ப்பார்கள். ஆனால், உண்மை அறிந்த தமிழ் தலைமைகளோ, அதனை ஒரு பொருட்டாகவே கருத மாட்டார்கள். பிரபாகரன் பெயருக்கு பயந்து, தங்களது பிரிவுகளையும் பிடிவாதத்தையும்கூட விட்டு விடமாட்டார்கள்.

என்ன, சும்மா கிடந்த சங்கை, ஊதி கெடுத்த ஆண்டிகளாக, நெடுமாறனும், காசி ஆனந்தனும், பிரபாகரனுக்கு இன்னும் பெரிய அளவில் ஆதரவு இருக்கிறது என்ற மாயையை அவர்களாகவே உடைத்துள்ளார்கள். அவ்வளவுதான்!

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்
செவ்வழி நயனம்

# மகத்துவம் மிக்க மஹா சிவராத்திரி

சகல பிரம்மாண்டமும் சிவலிங்கம்தான். வேதத்தின் நடு நாயகமாக விளங்கும் ஸ்ரீ ருத்ரத்தில் இப்படித்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

சர்வ பதார்த்தங்களும், நல்லது, கெட்டது, உணரக்கூடியது, உணர்வுக்கு அப்பாற்பட்டது எல்லாம் சிவ ஸ்வரூபம் என்று ஸ்ரீ ருத்ரம் சொல்லுகிறது.

அத்தகைய லிங்கம் ஏன் வட்ட வடிவமாயிருக்கிறது? வட்டமான ஸ்வரூபத்துக்குத்தான் அடி முடியில்லை; ஆதியில்லை, அந்தமுமில்லை. மற்றவைகளுக்கு உண்டு. முக்கோணத்துக்கும் சதுரத்துக்கும் உண்டு.

ஆதியந்தம் இல்லாத வஸ்து சிவம் என்பதை லிங்காகாரம் காட்டுகிறது.

அவ்வாறே உருவமற்ற சிவமும் ஒரு உருவத்தோடு வந்து அருள் செய்தால் தான் ரொம்ப சந்தோமாக எம் போன்றவர்களால் உணரக்கூடியதாக இருக்கும்.

ஞானிகளுக்கு மட்டுமே பரமாத்ம ஸ்வரூபத்தின் நிராகார (அருவ) உண்மை புரியும். உருவத்தைப் பார்த்து பார்த்து ஆனந்தம் அனுபவிக்கிற நமக்கு உருவத்தோடு கண்டால்தான் ஆனந்தம் உண்டாகும்.

அதற்காகத்தான் உருவமற்ற பரமேசுவரனான சிவபெருமான் அருவுருவான லிங்கமானதோடு நில்லாமல், அந்த லிங்கத்துக்குளேயே திவ்யரூபம் காட்டும் லிங்கோத்பவ மூர்த்தியாக இருக்கிறார்.

இப்படி ரூபத்தைக் காட்டினாலும், உண்மையில் தமக்கு அடியும் இல்லை, முடியும் இல்லை, அதாவது ஆதியும் அந்தமும் அற்ற ஆனந்தப் பொருளே தாம் என்று உணர்த்துவதற்காக, மேலே லிங்க வட்டத்துக்குள் ஜடாமுடி முடியாமலும், கீழே அந்த மாதிரியே தம் பாதம் அதற்குள் அடங்காமலும் இருப்பதாகக் காட்டுகிறார்.

அடிமுடி எல்லை இல்லாமல், அவர் ஜ்யோதி ஸ்வரூபமாக நின்றார். ஜ்யோதிர்லிங்கமாக, ஆகாயத்துக்கும் பூமிக்குமாக பரமசிவன் காட்சி தந்த இரவே சிவராத்திரியாகும்.

இந்த மகோன்னதமான இரவு குறித்து எத்தனை எத்தனையோ கதைகள், புராணச் செய்திகள் பரவிக்கிடக்கின்றன.

இந்த இரவு உள்ளத்தெளி ஏற்றப்படும் நன்னாள். ஒளி மயமான சிவபெருமானின் திருநாள்.

அந்நாளில் சிவ மயம் எங்கணும் பரவட்டும்!!



- மயூரகிரிக்குருக்கள் -

## சிவராத்திரி தினத்தில் சிந்திப்போம் வாருங்கள்!

**வேதத்தின் முதல்வன் விடமுண்டன் கண்டன்**
**ஆதியந்தம் இல்லான் அருளொளியாய் நிறைவான்**
**சோதியென எழுந்தான் துடுக்கொழிய வைத்தான்**
**மாலயனின் மயக்கம் போக்கியவன் நின்றான்**

**மாலயனின் மயக்கம் போக்கிய நாளுலகில்**
**மகாசிவ ராத்திரியாய் மலர்ந்ததென வுரைப்பார்**
**சீலமுடன் சிவனை சிரத்தையுடன் எண்ணி**
**விரதமதை விரும்பி நோற்றிடுவார் அடியார்**

**பசித்திருக்க வேண்டும் தனித்திருக்க வேண்டும்**
**விழித்திருக்க வேண்டும் மெய்யுணர்தல் வேண்டும்**
**ஆலமதை உண்ட அருட்கடலாம் சிவனை**
**அகமிருத்தி விரதம் அனுட்டிக்க வேண்டும்**

**அப்பனுக்கு ஒன்று அம்மைக்கு ஒன்பது**
**இப்புவியில் விரதமதை ஏற்கின்றார் அடியார்**
**எல்லாமே இராத்திரியாய் இருப்பதுதான் சிறப்பு**
**இறையுணர்வை ஊட்டுவதே இதன் நோக்கமாகும்**

**விரதமெனும் வார்த்தை வெறும் வார்த்தையல்ல**
**பவவினைகள் போக்கும் பாங்கான வார்த்தை**
**உடலுளத்தைத் தூய்மை ஆக்கிவிடும் வார்த்தை**
**உணர்வுடனே செய்தால் உயர்நிலையே வாய்க்கும்**

**ஆன்மீகக் கருத்துக்களை அலட்சியமாய் நோக்கும்**
**அவலமது அலையலையாய் எழுகிறது நாளும்**
**அறிவியலை நிறைத்தபடி ஆன்மீகம் அமைந்திருக்கு**
**அதை உணர்ந்தால் அலட்சியமும் அகன்றோடிப்போகும்**

**பிறக்கின்ற நாளெல்லாம் பெம்மானை நினைக்க**
**இருக்கின்ற வகையினிலே இணைத்தார்கள் முன்னோர்**
**வையத்து வாழ்வார்கள் வாழ்வாங்கு வாழ**
**மனஞ்சிறக்க விரதமெலாம் வண்ணமுற வைத்தார்**

**புராணக் கதையெல்லாம் பொருந்துமா என்பார்**
**பூதலத்தில் கருத்துரைக்க தேர்ந்த வழியன்றோ**
**கதையுரைத்து கதையுரைத்து கடவுளுணர் வூட்டும்**
**காரியத்தை புராணமாய் கண்டார்கள் முன்னோர்**

**மூடத் தனமென்று முழஞ்சுழிக்க வேண்டாம்**
**முன்னோர்கள் சிந்தனையில் முகிழ்த்ததுதான் புராணம்**
**முன்னைப் பழம்பொருளாய் முதலுக்கும் முதலாக**
**விண்ணிற்கும் பரம்பொருளை விளக்கியதும் புராணமன்றோ**

**திருமுறைகள் போற்றுகின்ற செம்பொருளாம் சிவனை**
**சிவராத்திரி தினத்தில் சிந்திப்போம் வாருங்கள்**
**சித்தர்க்குச் சித்தராம் திருச்சிற்றம் பலத்தானை**
**பக்தியாய் பாடிப் பரவிடுவோம் வாருங்கள்**

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

# சிவராத்திரியின் வகைகளும் அவற்றின் சிறப்புகளும்

சிவனுக்கு உகந்த இரவு என்று சொல்லக் கூடிய சிவராத்திரியை பற்றி அற்புதமான தகவல்கள் அதிகம் உள்ளன. சிவ சிவ என்று சொன்னால் போதும் துன்பங்கள் எல்லாம் திசை தெரியாமல் போகும்.

சிவம் என்ற சொல்லுக்கு மங்களம் தருபவர் என்று பொருள். சிவபெருமான் லிங்கமாக உருவமெடுத்த தினமே சிவராத்திரி ஆகும். நமசிவாய என்னும் மந்திரத்தை மனதில் நினைக்க எந்த தீமைகளும் நெருங்காது.

ஒரு வருடம் சிவராத்திரி விரதம் இருந்தால் நூறு அசுவமேத யாகம் செய்த பலனும், பல தடவை கங்கா ஸ்நானம் செய்த பலனும் கிடைக்கும்.

சிவனை அதிகாலையில் வணங்கினால் நோய்கள் தீரும். பகலில் வணங்கினால் விருப்பங்கள் நிறைவேறும். இரவில் வணங்கினால் மோட்சம் கிடைக்கும்.

**மாத சிவராத்திரி விரத வழிபாட்டின் முக்கிய மான ஆறு அம்சங்கள்**

சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தல் வேண்டும். இது ஆன்மாவைத் தூய்மைப் படுத்துதலை குறிக்கும்.

லிங்கத்திற்கு குங்குமம் அணிவித்தல் நல்லியல்பையும், நல்ல பலனையும் வழங்கும்.

நைவேத்தியம் கொடுத்தல் நீண்ட ஆயுளையும், விருப்பங்கள் நிறைவேறும் என்பதையும் குறிக்கும்.

தீபமிடுதல் செல்வத்தை வழங்கும்.

எண்ணெய் விளக்கேற்றுதல் ஞானம் அடைதலைக் குறிக்கும்.

வெற்றிலை அளித்தல் உலக இன்பங்களில் திருப்தியைக் குறிக்கும்.

**ஐந்து சிவராத்திரி**

**மகா சிவராத்திரி**

மாசி மாத தேய்பிறை சதுர்த்தசி நாளே மகா சிவராத்திரியாகும். இந்த சிவராத்திரிக்கு வரு சிவராத்திரி என்ற பெயரும் உண்டு.

**யோக சிவராத்திரி**

திங்கட்கிழமையன்று சூரிய உதயம் முதல் இரவு முழுவதும், அதாவது பகல், இரவு சேர்ந்த அறுபது நாழிகை (இருபத்தி நான்கு மணி) யும் அமாவாசை இருந்தால் அன்று யோக சிவராத்திரி ஆகும்.

**நித்திய சிவராத்திரி :**

வருடத்தின் பன்னிரெண்டு மாதங்களிலும் வரும் தேய்பிறை, வளர்பிறை சதுர்த்தசி திதி இடம் பெறும் இருபத்தி நான்கு நாட்களும் நித்திய சிவராத்திரி ஆகும்.

**பட்ச சிவராத்திரி**

தை மாத தேய்பிறை பிரதமை அன்று தொடங்கி, பதின்மூன்று நாட்கள் தினந்தோறும் முறைப்படி ஒரு வேளை உணவு உண்டு, பதினான்காம் நாளான சதுர்த்தசி அன்று முறைப்படி விரதம் இருப்பது பட்ச சிவராத்திரி எனப்படும்.

**மாத சிவராத்திரி**

மாதந்தோறும் அமாவாசைக்கு முன்தினம் வரும் சதுர்த்தசி திதியில் வருவது மாத சிவராத்திரி ஆகும்.

- பண்பரசு -

# தீட்சைகளின் வகைகள் பற்றி சிந்திப்போம்

1. பட்டாடை போட்டு மறைத்துச் சீடனின் வலக்காதில் திருவைந்தெழுத்தை உபதேசிப்பது வாசக தீட்சையாகும்.

2. பறவை தனது முட்டையைச் சிறகினால் அணைத்து வெப்பமூட்டி, குஞ்சு வெளிப்பட செய்வது போல, குரு தனது சீடனைத் தன் திருக்கரத்தால் ஸ்பரிசிப்பது ஸ்பரிச தீட்சையாகும்.

3. மீன் தனது முட்டைகளைப் பார்வையினால் பொரிக்கச் செய்து, அவற்றின் பசியையும் போக்குவது போல, குருநாதர் தம் சீடனை அருள் பார்வையால் ஞானமீந்து அருளல் சட்சு தீட்சை அல்லது நயன தீட்சை எனப்படுகிறது.

4. ஆமை கரையிலிருந்தவாறே தனது முட்டையைத் தனது மனத்தில் நினைக்க, ஆமைக்குஞ்சு வெளிப்படுவது போல, குரு தம் சீடனை அருள் உருவாய் பாவிப்பது மானச தீட்சையாகும்.

5. பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளின் உண்மையினையும், இயல்பினையும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் நீங்கி முக்திப் பேறடைய சிவாகமங்கள் வழியில் நின்று தெளிய போதிப்பது சாத்திரத் தீட்சையாகும்.

6. சிவயோகம் பயில உபதேசிப்பது யோக தீட்சையாகும்.

7. குண்ட மண்டலமிட்டு அக்நி காரியம் செய்து, பாசத்தைப் போக்குவது அவுத்திரி தீட்சையாகும்.

**- சிவஸ்ரீ. நாதன் குருக்கள் -**
**ஆஸ்திரேலியா.**

## இனி இது .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில்லை, இருக்கிறவர்களும் புனிதர்கள் இல்லை, இனி வரப்போகிறவர்களும் புனிதர்களாக இருக்கப்போவதில்லை. எனவே பழங்கதைகளைப் பேசிக் கொண்டும், அடுத்தவர் மீது பழியைப் போட்டுக்கொண்டும், அடுத்தவர் பல வீனத்தை உங்கள் பலமாக்கிக்கொண் டும் கேவலமான அரசியல் நடத்தும் கலாசாரத்தை இத்தோடு நிறுத்திக் கொண்டு. இனியாவது மக்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள், அதை எப்படிச் செய்யப் போகிறீர்கள் என்பதை எடுத்துச் சொல்லி அரசியல் செய்யும் புதிய கலாசாரத்தை உருவாக்கப் பாருங் கள். வரலாறு அதன் பாதையில் உங்கள் இருப்பைக் குறித்து வைத்துக்கொள் ளும். அதைவிடுத்து ஒற்றுமை, இனத் தின் விடுதலைக்கான பற்றுறுதி என்ற பெயரில் மக்களை ஏமாற்றிய அரசியல் இனிப்போதும்.

இங்கே இருக்கின்ற எல்லாக் கட்சிக ளுமே உங்கள் பற்றுறுதியில் காலா காலத்திற்கும் வழுக்கி வழுக்கித்தான் ஏறிக்கொண்டிருக்கிறீர்கள். இதில் அவர் சிறப்பு இவர் குறைவு என்று கூறுவதற்கு எதுவும் இல்லை.

- இடிமின்னல் -

## அமெ. பாதுகாப்பு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதர கத்தின் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டி னன்ட் கேர்ணல் அந்தோனி நெல்சன் னுடன் பாதுகாப்பு இராஜாங்க அமைச் சுக்கு வருகை தந்த அமெரிக்காவின் முதன்மை பிரதி உதவிப் பாதுகாப்புச் செயலாளர் குழுவினர் முக்கியமான கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பான விடயங் களை அடிப்படையாகக் கொண்டு இரு வருக்கும் இடையே சுமுகமான கலந்து ரையாடல் இடம்பெற்றது என்று அமைச்சு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது அமெ ரிக்க தூதரகத்தின் உதவி பாதுகாப்பு ஆலோசகர் செத் நெவின்ஸ், அமெ ரிக்காவின் தெற்காசிய விடயங்கள் தொடர்பான அலுவலகர் லெப்டினன்ட் கேர்ணல் கிறிஸ்டியன் மிட்செல், இலங்கை பாதுகாப்பு அமைச்சின் மூத்த உதவிச் செயலாளர் ஹர்விதாணா ராச்சி ஆகியோரும் உடனிருந்தனர்.

இதேவேளை, அமெரிக்கத் தூதுக் குழுவினர், கோட்டே, ஸ்ரீ ஜயவர்தனபுர வில் உள்ள பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்ததுடன் பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்னவையும் சந்தித்தனர்.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த அமெரிக்காவின் முதன்மை பிர திப் பாதுகாப்புச் செயலாளர் ஜெடியா பிறொயல் பாதுகாப்புச் செயலாளரால் வரவேற்கப்பட்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்து தல் மற்றும் பிராந்திய பாதுகாப்பு உறு திப்பாடு குறித்தும் இதன்போது கலந்து ரையாடப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் தரைப்படை இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் தினேஷ் நாணயக்கார, அமெரிக்கத் தூதரகத்தின் உதவி பாதுகாப்பு இணைப் பாளர் செத் நெவின்ஸ் மற்றும் அமெ ரிக்க தெற்காசிய விடயங்கள் தொடர்பான அலுவலகர் லெப்டினன்ட் கேர்ணல் கிறிஸ்டியன் மிட்செல் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டி ருந்தனர்.

## இளம் பொலிஸ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளம் பொலிஸ் கொன்ஸ்டபிள் தவ றான முடிவால் உயிரிழந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமை புரியும் 26 வயதான பிரதீப் என்ற கொன்ஸ்டபிள் கல்வயலில் உள்ள அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். அவர் தற்கொலை செய்துகொண்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் மீட்கப்பட்டு உடற்கூறுச் சோதனை மற்றும் இறப்பு விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை சாவகச் சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வரு கின்றனர்.

## மட்டு. வாவியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடல் மட்டு. வாவியில் நேற்று மிதந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

மட்டக்களப்புத் தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லேடி மெ னிங் வீதிக்கு அருகாமையில் வாவியில் மிதந்துகொண்டிருந்த சடலம் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் வந்து சடலத்தை மீட்டனர்.

திருக்கோயில் பகுதியைச் சேர்ந்த ரீ.சுதர்சன் (வயது – 24) என்ற இளைஞ னின் சடலமே அது என அவரது உறவி னர்களால் அடையாளம் காட்டப்பட்ட தாக மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## தேர்தலை ஒத்தி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜோசப் ஸ்டாலின் குற்றஞ்சுமத்தினார்.

வாக்குச்சீட்டுகளை அச்சிட முடியாது என இலங்கை அச்சகம் அறிவித்துள்ள விடயமானது சூழ்ச்சியின் ஓர் அங்கம் என்றார் அவர்.

அரச அச்சகத் தலைவரின் ஊடாக இந்தச் சூழ்ச்சி இடம்பெறுகின்றது. வரலாற்றில் ஒருநாளும் பணம் இல்லை என்று இவை இடம்பெறவில்லை. பணம் இல்லையென்றுகூறி இந்த நாடகம் நடக்கிறது.

இலங்கை மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்காத தற்போதைய அரசு வாக்குரிமையையும் இல்லாது செய்வ தற்கான முயற்சிகளை முன்னெடுக் கின்றது. எனினும், அதற்கு ஒருபோ தும் இடமளிக்கப்போவது இல்லை – என்றார்.

## 12 மாவட்டங்களில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

இவற்றில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தறை, யாழ்ப் பாணம் ஆகிய மாவட்டங்கள் முதன்மை நிலையில் உள்ளடங்குகின்றன.

மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், கேகாலை, இரத்தினபுரி மற் றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களும் டெங்கு அபாய வலயங்களாகப் பெயரி டப்பட்டுள்ளன என்றும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் இதுவரை 3 ஆயி ரத்து 637 டெங்கு நோயாளர்கள் பதி வாகியுள்ளனர். எனவே மக்கள் முன் னேற்பாட்டு நடவடிக்கைகளை எடுத்து நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப் படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

## பாலியல் துன்புறுத்தல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துன்புறுத்திய நான்கு பேரைப் பொலி ஸார் கைது செய்தனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, வெலிகம வில் கடந்த 10 ஆம் திகதி தனிப்பட்ட வகுப்புக்குச் சென்ற சிறுமி சந்தேகநபர் களால் கடத்தப்பட்டுப் பாலியல் ரீதி யாகத் துன்புறுத்தப்பட்டுள்ளார்.

சம்பவத்தை வெளியே சொன்னால் கொன்றுவிடுவோம் என்று சந்தேக நபர்கள் கொலை மிரட்டலும் விடுத்துள் ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்த னர்.

கைதான 20 வயதுடைய நான்கு சந்தேகநபர்களும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின் றனர்.

சிறுமி மாத்தறை பொது வைத்தி யசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டுள்ளார்.

## யாழ். சர்வதேச .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு இடம்பெறுவதில் சிக்கல் ஏற்பட் டுள்ளது. இந்தக் கண்காட்சியை நடத் தும் நிறுவனம் யாழ். மாநகர சபைக்குச் செலுத்த வேண்டியுள்ள நிலுவைத் தொகையான 39 லட்சம் ரூபாயை செலுத்தாமல் கண்காட்சி நடத்துவதற்கு அனுமதிப்பதில்லை என்று சபைக் கூட்டத்தில் நேற்று முடிவு செய்யப்பட் டுள்ளது.

வழக்கம் போலவே இந்த ஆண் டும் மார்ச் மாதம் 3 முதல் 5 வரையான திகதிகளில் வர்த்தகக் கண்காட்சியை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன. அதற்கான அனுமதி யைக் கேட்டு யாழ். மாநகர சபைக்கு விண்ணபிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சபையின் பெப்ரவரி மாதக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

2019 ஆம் ஆண்டு முதல் நடை பெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சி களுக்கான வரி, மற்றும் இதர கட்டண மாக சுமார் 39 லட்சம் ரூபாய் செலுத்தப் படாமல் நிலுவையிலுள்ளது என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே நிலுவையைச் செலுத்தாமல் அனுமதி வழங்குவதில்லை என்றும், மாநகர சபையினால் வழங்கப்படும் சுகாதார சேவைகள் உட்பட நலச்சேவைகளை வழங்குவதில்லை எனவும் சபையில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

## தலைவர் பிரபாகரன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணியின் தலைவர் சி.வி.விக்கி னேஸ்வரன் "எங்களுடைய மனதில் எப்போதும் இருக்கின்றார்" எனவும் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நலமாக உயிருடன் இருப்பதாக பழநெடுமாறன் கூறியுள்ள கருத்து தொடர்பில் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவித் ததாவது..

ஒருத்தர் இருக்கிறாரா இல்லையா என்பதைப்பற்றி அவர் வெளியில் வரும் வரைக்கும் எங்களுக்குச் சரியாகச் தெரியாது. ஆனால் அவர் எங்களுடைய மனதில் இருக்கின்றார்.

விடுதலை வீரர்கள் சம்பந்தமாக இதற்கு முன்னரும் நான் கூறியிருக் கின்றேன். அதாவது எந்த ஒரு விடு தலை வீரரும் மக்களுடைய மனதில் நிறைந்து இருக்கின்றார்கள். அதே போன்று தான் சுபாஷ் சந்திரபோஷும் இருக்கிறார். இவரும் இருக்கின்றார்.

அவர் வருவாரோ இல்லையோ என்பதை நாங்கள் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் – என்றார்.

## பிரபாகரனின் பெயரை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இது தொடர்பில் காலைக்கதிர் பத்தி ரிகைக்கு அவர் தெரிவித்ததாவது:

உலகில் ஒவ்வொரு நாடுகளிலும் அஹிம்சை வழியிலும், ஆயுத வன் முறை வழியிலும் போரிட்ட தலைவர் களுக்கு தனிச்சிறப்புகள் உண்டு.

அதனால் அவர்கள் உயிரிழந்த பின்னரும் தங்கள் மனங்களில் உயிர் வாழ்கின்றார்கள் என்று சிலர் கருது கின்றார்கள்.

ஆனால், பிரபாகரன் விடயத்தில் அது சற்று வேறுபாடாக இருக்கின்றது. இலங்கையில் பிறந்து, இலங்கையில் வாழ்ந்து, இலங்கையில் போரிட்டு மர ணித்த அவரை வைத்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தமிழ்த் தலை வர்கள் பிழைப்பு நடத்துகின்றனர்.

பிரபாகரன் இறுதிப் போரின்போது உயிரிழந்துவிட்டார். அவரின் பெயரை வைத்து அரசியல் பிழைப்பு நடத்து வதை தமிழ் அரசியல் தலைவர்கள் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண் டும். – என்றார்.

## பொன்சேகா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றையாட்சி நாட்டில் சமஸ்டிக்கு இட மில்லை என்றும் அத்தகைய ஒற்றை யாட்சி நாடான இலங்கையில் வாழ முடியாவிட்டால் விக்கினேஸ்வரன் லண்டனுக்கு ஓடவேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் பீல்ட்மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

இது தொடர்பான செய்தி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலைக்கதிர் பத்தி ரிகையில் தலைப்புச் செய்தியாக வெளி வந்திருந்த நிலையில் இன்றைய தினம் செய்தியாளர்களிடம் பேசிய விக்கினேஸ் வரனிடம் அது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

"சரத் பொன்சேகா என்னை இலண்ட னுக்கு போகச் சொன்னால் நான் அவரை போர்த்துக்கல்லுக்கு போகச் சொல்லவேணும். ஏனெனில் அவரின் பெயரே போர்த்துக்கல்லில் இருந்து வந்த பெயர்தான். பொன்சேகா என்பது சிங்களப் பெயரும் இல்லை தமிழ்ப் பெயரும் இல்லை. ஆகவே அவரைப் போர்த்துக்கல்லுக்கு போகச் சொல் லுங்கள் என சரத் பொன்சேகாவிற்கு" என்றார் விக்னேஸ்வரன்.

இதேவேளை, யாழ்ப்பாண கலாசார நிலையம் தொடர்பில் கருத்துக்கூறிய அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண கலாசார மண்டபம் தமிழ் மக்களுக்கென்று இந்தியாவால் வழங்கப்பட்டது. ஆகவே அதனைப் பராமரிப்பது கலாச்சார நிகழ்வுகளை நடத்துவது என அனைத்தையும் தமிழ் மக்கள்தான் செய்யவேண்டும். அவர் கள் கையிலே முழுப் பொறுப்பும் இருக்கவேண்டும்.

இதைவிடுத்து கொழும்பு ஆட்சி அதற்கு ஒரு குழு அமைத்து தானே செயற்படுத்துவது அல்லது வைத்தி ருப்பது முறையானது அல்ல. அதனை ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

இந்த மத்திய நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கும் பொழுது நான் முதலமைச்சராக இருந்தேன். அப் பொழுது இது மாகாண சபைக்கு வரு மென்றுதான் எதிர்பார்த்திருந்தோம். இப்பொழுது மாகாண சபை வலுவில் இல்லாதபோது அது மாநகர சபைக்கா வது கொடுக்கப்படவேண்டும்.

ஐந்து வருட காலத்திற்கு அதற்குரிய செலவுகளை தருவதாக இந்தியா கூறியிருப்பதால் எங்களுடைய மாநகர சபையே இதைக் கொண்டு நடத்தலாம் என்று நம்புகிறேன்.

இது எந்தவிதத்திலும் தமிழ் மக் களின் கைகளில் இருந்து கொழும்பு ஆட்சியிடம் போவதை நான் விரும்ப வில்லை. அவ்வாறான செயற்பாடுகளை கண்டிக்கிறேன். இதற்குரிய நடவடிக் கைகளை ஜனாதிபதி எடுப்பார் என்றும் நம்புகிறேன்.

தங்களுடைய கலாசார மண்டபத் தைத் தாங்களே பாவிக்கக் கூடிய வகையில் பராமரிப்பதற்கான சந்தர்ப் பத்தை கொடுக்க வேண்டுமென்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின் றேன் – என்றார்.

## வன்முறைகளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸா ரைக் கேட்டுள்ளதுடன், அவ்வாறான சம்பவம் நடைபெற்றிருக்குமானால் அது கண்டிக்கப்படவேண்டியது எனவும் தெரிவித்தார் என்று அமைச்சரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

எந்தவொரு சூழலிலும் யாரும் வன் முறைகளை கையில் எடுப்பதை அனு மதிக்க முடியாது எனவும், எமது தொப் புள்கொடி உறவுகள் பாதிக்கப்படாத வகையிலே இந்த விவகாரம் கையாளப்

(04ஆம் பக்கம் பார்க்க)

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 04 வியாழக்கிழமை 16.02.2023 கதிர் 351

## மின்வெட்டு இனி இல்லை

இன்று முதல் தொடர்ச்சியாக மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று எரிசக்தி மற்றும் வலுச் சக்தித் துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை 66 சதவீதத்தால் அதிகரித்தைத் தொடர்ந்து நிலக்கரியைக் கொள்வனவு செய்வதற்கான 22 பில்லியன் ரூபாவை மேலதிக கடனாக வங்க இலங்கை மத்திய வங்கி 2

# தமிழருக்குத் தீர்வில்லையேல் முஸ்லிம்களுக்கும் தீர்வில்லை

### அடித்துக் கூறுகிறார் முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் அப்துல் மஜீத்

(எம்.எம்.அஸ்லம்)

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு என்பன தமிழ் மக்களுக்கு மட்டும் உரித்தானது எனவும் அது முஸ்லிம் சமூகத்திற்கு பாதிப்பாக அமைந்து விடலாம் எனவும் சிலர் கூறுவது அவர்களது அறியாமையினாலாகும். உண்மையில் இத்தகைய அதிகாரப் பகிர்வின் மூலம்தான் முஸ்லிம்களினது உரிமைகளும் உறுதிப்படுத்தப்படும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் வடக்கு- கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீத் தெரிவித்தார்.

“தமிழர்களுக்குத் தீர்வின்றேல் முஸ்லிம்களுக்கும் தீரவில்லை என்பதை ஆணித்தரமாக கூறி வைக்க விரும்புகின்றேன்” என்றார் அவர்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது; 2



## மீண்டும் வெளியேறினார் கோட்டாபய

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்வும் அவரது மனைவி அயோமா ராஜபக்ஷவும் இன்று காலை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

மலேஷியாவின் கோலாலம்பூர் விமான நிலையத்திற்குச் செல்லும் அவர்கள் அங்கிருந்து சீனாவுக்குப் புறப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக விமான நிலையத் தகவல்கள்தெரிவிக்கின்றன.

மலேஷியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் இருவரும் இன்று அதிகாலை 12.25 மணிக்கு புறப்பட்டனர்.



மின்சாரக் கட்டணம் திடீரென பெருமளவில் அதிகரிக்கப்பட்டதைக் கண்டித்து பாவனையாளர்கள் இருவர் இன்று மின்சக்தி மற்றும் வலுச் சக்தி அமைச்சின் முன்பாக அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். எதிர்ப்பு கோசங்கள் அடங்கிய பதாகைகளுடன் அவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

## பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தலைவரின் அலுவலகத்துக்கு ‘சீல்’

### அவர் நாட்டில் இல்லாத நிலையிலேயே பொலிஸ் நடவடிக்கை

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரட்ணாயக்கவின்அலுவலகம் இன்று கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் மூடி முத்திரையிடப்பட்டது.

கொழும்பு கோட்டை நீதிவானின் உத்தரவின் அடிப்படையில் தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆணைக்குழுத் தலைவரின் அலுவலகத்திற்குள் குழு ஒன்று பலவந்தமாக நுழைந்து அங்குள்ள ஆவணங்களைச் சேதப்படுத்தத் திட்டமிடுவதாகத் தமக்குத் தகவல் கிடைத்ததை அடுத்து பொலிஸார் இந்த விடயத்தை நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு சென்று அலுவலகத்தை மூடி முத்திரையிடும் உத்தரவைப் பெற்றனர்.

ஆணைக்குழுவின் தலைவர் தற்போது நாட்டில் இல்லை என்று கூறப்படுகின்றது. அவர் இல்லாத நிலையிலேயே அலுவலகத்தை மூடி முத்திரையிட்டுள்ளனர் பொலிஸார்.

மின்சாரக்கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான அமைச்சரவையின் முடிவை ஏற்க முடியாது என்று ஆணைக்குழுவின் தலைவர் 2



## யாழ். மாநகர சபை உறுப்பினர்களில் சிலரை நாயோடு ஒப்பிட்ட உறுப்பினருக்கு தடை

யாழ்ப்பாணம் மாநகர சபையில் சக உறுப்பினர்களை நாயுடன் ஒப்பிட்டு உரையாற்றிய உறுப்பினருக்கு ஒரு மாத தடை விதித்தார் முதல்வர் இ.ஆனல்ட்.

சபையின் 2023 பெப்ரவரி மாதக் கூட்டம் இன்று சபை மண்டபத்தில் இடம்பெற்றது. அமர்வு இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயம். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் பாலசுப்பிரமணியம் பத்மமுரளி சபை நாகரிகத்துக்குப் பொருந்தாத வார்த்தையைப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டிலேயே அவருக்கு சபையின் அனுமதியுடன் முதல்வர் தடை விதித்தார்.

மாநகர சபை 2

## இந்தியாவுக்கு நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.16

தமிழ் மக்களிற்காக ஓர் அழகிய பண்பாட்டுக் கட்டடத்தை கட்டி வழங்கிய இந்திய அரசிற்கு யாழ்ப்பாணம் மாநகர சபையிலே நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2023 பெப்ரவரி மாத கூட்டம் இன்று சபை மண்டபத்தில் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே தமிழ் அரசுக் கட்சியின் மாநகர சபை உறுப்பினர் சொ.சிறில் இத் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இந்திய அரசின் 100 கோடி ரூபா இந்திய நாணயத்தில் 2014-06-09 அன்று இந்தியத் தூதுவர் வை.கே.சிங்காவுடன் இலங்கை அமைச்சர் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 2016ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவரும் 2

## உணவுகளின் விலை அதிகரிப்பு

மின்சாரக் கட்டடண உயர்வை அடுத்து சில உணவுப் பொருட்களின் விலைகள் 10 சதவிதத்தினால் அதிகரிக்கப்படுவதாக இலங்கை சிற்றுண்டிச் சாலையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

உணவுப்பொதி, கொத்து ரொட்டி மற்றும் ப்ரைட் ரைஸ் ஆகியவற்றின் விலைகளை இன்று நள்ளிரவு முதல் அதிகரிப்படுகின்றன என்று சங்கத்தின் அமைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்தார்.

“கடந்த முறை மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டபோது சிற்றுண்டிச்சாலையாளர்கள் உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரிக்கவில்லை. அதனால் இப்போது விலைகளை அதிகரிப்பது தவிர்க்க முடியாதது. தற்போதைய சூழலில் பழையவிலைக்கே உணவுகளைக் கொடுப்பது சாத்தியமற்றது என்பதால் விலைகளை அதிகரிக்கவேண்டியுள்ளது” என்றும் அவர் தெரிவித்தார்.

## நாயோடு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் சிலர் வைக்கோல் பட்டைநாய்போன்றுசெயல்படுகின்றனர் என விளித்தார் பத்மமுரளி. அவ்வாறு தவறான வார்த்தை கொண்ட உவமையைகூற வேண்டாம் அந்தச் சொல்லை மீளப் பெற்று மன்னிப்புக் கோருங்கள் என ஏனைய உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால் தான் பேச்சு வழக்காறில் உள்ள உவமையைத்தான் கூறினார், தொப்பி அளவானவர்கள் அணியலாம் மன்னிப்புக் கோரமாட்டேன் எனப் பிடிவாதமாக நின்றுகொண்டார் அவர்.

இதேபோன்று முன்னரும் ஒரு தடவை உறுப்பினர் ஒருவர் ''நாய் மாதிரி குலைக்கக்கூடாது'' எனக் கூறிய வார்த்தைக்கு மன்னிப்புக்கோர மறுத்தமையால் அவரை முன்னால் முதல்வர் சபை அனுமதியுடன் ஒரு மாதம. சபை நடவடிக்கைகளில் இருந்து நிறுத்தி வைத்தார் என்றும், அந்த நடவடிக்கை உறுப்பினருக்கு உறுப்பினர் மாறுபடக்கூடாது என்றும் சபையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்துநாயைஉவமைப்படுத்திய உறுப்பினரை சபை அமர்வில் இருந்து வெளியேற்றுவதாகவும் அவரை சபை நடவடிக்கைகளில் இருந்து ஒரு மாத காலத்திற்கு இடைநிறுத்துவதாகவும் முதல்வர் தனது முடிவை அறிவித்தார். அதைச் சபை ஏற்கிறதாக என்று அனுமதியும் கேட்டார். சபையில் இருந்தவர்கள் அந்த முடிவை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் தடையை முதல்வர் நடைமுறைப்படுத்தினார்.

## மின்வெட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணக்கம் தெரிவித்துள்ளதால் மின்வெட்டை நடைமுறைப்படுத்தவேண்டிய தேவை இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கட்டண அதிகரிப்பைத் தொடர்ந்து மக்களுக்கு தடையற்ற மின்சாரத்தை வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என்று தெரிவித்துள்ள அவர், அதற்கமைய தடையற்ற மின்சாரத்தை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

## இந்தியாவுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகர சபை ஆணையாளரும் ஒப்பந்தம் எழுதி மேற்கொண்ட 11 அடுக்கு மாடிக் கட்டடம் சபைக்கு கிடைக்கவும் இந்தியாவே ஆவண செய்ய வேண்டும் எனவும் அந்தத் தீர்மானத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

தமிழ் மக்களின் கலாச்சார நகரத்தில் ஓர் கலாச்சார அரங்கத்தை அமைத்து தந்து அதற்கு 5 ஆண்டுகளிற்கான செலவீனத்தையும் ஏற்றுக்கொண்ட இந்தியாவுக்கும், பெரும் நெருக்கடியின் மத்தியிலும் அந்தக் கட்டடம் எமக்கு கிடைக்கவேண்டும் என்று இறுதிவரை முயன்ற இந்தியத் தூதரகத்திற்கு நன்றி தெரிவித்து தீர்மானம் அனுப்பும் அதேநேரம் கட்டடம் மாநகர சபையிக்குக் கிடைப்பதனையும் உறுதி செய்ய வேண்டும் வலியுறுத்தலும் அனுப்பி வைக்கப்படும் என்று முதல்வர் தெரிவித்தார்.

## பொதுப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்ட காலமாகவே தற்போதைய ஆட்சிக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்திருந்தார்.

கட்டண அதிகரிப்பை முன்வைத்த மின் வலுச் சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மீதும் அவர் கடும் காட்டமான விமர்சனங்களை முன்வைத்திருந்தார். இந்த நிலையில் ஆணைக்குழுவின் தலைவரைத் தவிர்த்து மற்றைய மூன்று உறுப்பினர்களின் சம்மதத்துடன் மின்சாரக் கட்டணங்களை நேற்று முதல் உயர்த்தியுள்ளது அரசு.

இந்தப் பின்னணியிலேயே ஆணைக்குழு தலைவரின் அலுவலகம் மூடி முத்திரையிடப்பட்டுள்ளது.

## தமிழருக்கு.....

அரசமைப்பில் கொண்டு வரப்பட்ட முதலாவது குடியரசு சாசனம் தமிழ் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை முழுவதுமாக புறந்தள்ளி சிங்கள பௌத்த மேலாண்மையை வலியுறுத்தி நின்றது. குறிப்பாக சோல்பரி அரசியல் யாப்பில் இடம்பெற்றிருந்த செனட் சபை (மூதவை) இல்லாதொழிக்கப்பட்டதுடன் பௌத்த மதத்தை அரச மதமாகவும் சிங்கள மொழியை அரச கரும மொழியாகவும் பிரகடனம் செய்திருந்தது .

அக்குடியரசுசாசனத்தைதமிழ்மக்கள் எதிர்த்து நின்றதுடன் அப்போது நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் அமிர்தலிங்கம் பகிரங்கமாக அரசமைப்பை தீயிட்டுக் கொளுத்தினார். இதன் விளைவாக அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அதுபோல் கடந்த 8ஆம் திகதி அன்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கொள்கை விளக்க உரையாற்றிக் கொண்டிருக்கையில் பௌத்த பிக்குமார் நாடாளுமன்றை நோக்கி ஆர்ப்பாட்டமாகச் சென்றதுடன் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை தீயிட்டுக் கொளுத்தினர்.

அவர்களைப்பொலிசார்கைதுசெய்ய முன்வரவில்லை. பொலிசாரின் அச்செயலானது நாட்டில் இரண்டு சட்டங்கள் உள்ளதை எடுத்துக்காட்டுகின்றது.

1957ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட பண்டா–செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஆயிரக்கணக்கான பிற்குமார் பிரதமரின் இல்லத்திற்கு முன்பாக சத்தியாக்கிரகம் இருந்தனர். இதனால் அந்த ஒப்பந்தம் கிழித்து வீசப்பட்டது. 1965இல் ஏற்படுத்தப்பட்ட டட்லி–செல்வா ஒப்பந்தத்தை அன்றைய எதிர்கட்சியான சுதந்திரக் கட்சியினர் தோல்வியடையச் செய்தனர்.

இனப்பிரச்சனைக்குத் தீர்வாக 1981ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபை முறைமை தோல்வியைத் தழுவிக் கொண்ட[...] போல் மாகாண சபை முறைமை[...]யையும் தோல்வியடையச் செய்வதற்[...] பௌத்த சிங்கள கடும் போக்குவா[...]கள் முயன்று கொண்டிருப்பதை[...] அவதானிக்க முடிகிறது.

அரசமைப்பின் 13ஆவது திருத்த[...] என்பதும் அதிகாரப் பகிர்வு என்பது[...] தமிழ் மக்களுக்கே உரித்தான சொந்[...] விடயம் என முஸ்லிம் சமூகத்தில் பல[...] நம்பிக்கை கொண்டுள்ளனர். அ[...] அவர்களின் அரசியல் அறியாமையை[...] பிரதிபலிக்கின்றது. அதிகாரப் பகிர்[...] என்பது வடக்குகிழக்கிற்கு மாத்திரமன்[...] அதற்கு வெளியே உள்ள 07 மாகாண[...] சபைகளுக்கும் உரியது என்பதனையு[...] குறிப்பாக முஸ்லிம், மலையகத் தமி[...] மக்களின் அரசியல் உரிமைகளும்[...] பிராந்திய அபிவிருத்தியும் அவர்கள[...] வாழ்விடங்களை உறுதிப்படுத்துவது[...] அதில் தங்கியுள்ளது என்பதையு[...] அனைவரும் புரிந்துகொண்டு செயற்ப[...] முன்வர வேண்டும்–என்றுள்ளது.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விபரீதத்தை விதைக்கலாமா அரசியல் தலைவர்கள்?

இலங்கை – இந்திய கடல் எல்லையில் சற்று உள்ளே இலங்கைக்கடற்பகுதிக்குள்வைத்துதமிழ்நாட்டுமீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மீன்பிடிப்பதற்காகச் சென்ற இரு பகுதி மீனவர்களுக்கும் இடையிலான மோதல் போன்ற இது தெரியவில்லை. திட்டமிட்ட குற்றச்செயலாகவே தெரிகின்றது. இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை எல்லைக்குள் வந்து மீன்பிடிப்பது எவ்வளவு தவறோ, இலங்கை மீனவர்களின் வலைகள், பொருட்களைஅறுத்தும்சேதமாக்கியும்செல்வது எவ்வளவு தவறோ அதேயளவுக்கு அவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தத் தாக்குதலும் பெருந் தவறு. கடும் கண்டனத்துக்குரியது.

காயமடைந்துள்ளஇந்தியமீனவர்களின்தகவல்களின்படி தாக்குதலை நடத்தியவர்கள் 3 சிறிய படகுகளில் கத்திகள் வாள்களுடன்இதற்கெனத்தயாராகவேவந்துள்ளனர். அவர் இலங்கைத் தமிழ் மீனவர்கள்தான் என்பது பாதிக்கப்பட்ட மீனவர்களின் எதிர்வுகூறல், எனினும் இந்தச் சம்பவத்திற்கு இதுவரையில் யாழ்ப்பாணத்திலோ அல்லது வடக்குக் கிழக்கு கரையோரங்களிலோ உள்ள எந்தவொரு மீனவர் சங்கங்களோ தனி நபர்களோ உரிமை கோரவில்லை. இருப்பினும் இந்தச் சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் வடக்கு கரையோரங்களில் குறிப்பாக யாழ்ப்பாணக் கரையோரங்களில் வாழ்பவர்களாக இருப்பதற்கான வாய்ப்புக்களை நிராகரிக்க முடியவில்லை.

அவர்கள் மேற்கொண்டது வெறும் குற்றச்செயல். பாதுக்கப்படும் மீனவர்களுக்குச் சார்பான ஒரு போராட்ட நடவடிக்கையல்ல. பதிலுக்குப் பதில் என்று இந்திய மீனவர்களும் இலங்கை மீனவர்களைத் தாக்கும் ஏற்பாடுகளுடனும் கத்திகள் வாள்களுடனும் கடலுக்கு வந்தால் இங்குள்ள மீனவர்களால் அதனை எதிர்த்து நிற்க முடியாமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். விளைவுகள் எந்தளவிற்குப் பாராதூரமானதாகவும் உறவு முறிவுகளைக் கொண்டதாகவும் இருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

குற்றங்களால் ஒருபோதும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது. பதிலாக அந்தப் பிரச்சினைகளைப் பெரிதாக்கத்தான் முடியும். எனவே இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் யாழ்ப்பாணக் கரைகளில் வாழ்பவர்களாக இருந்தால் அவர்களை மீனவர் சங்கங்களே இனங்கண்டு காவல்துறையினரிடம் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கவேண்டும்.

இந்தியமீனவர்களின்ஆக்கிரமிப்புமற்றும்அத்துமீறலுக்கு எதிராக ஒட்டுமொத்த மீனவர்களும் கடலில் இறங்கிப் போராடுவது வேறு, சிலர் அவர்களைத் தாக்கி வன்முறையில் ஈடுபட்டுக் குற்றமிழைப்பது வேறு என்பதை மீனவர் சங்கங்கள் தெளிவாக வேறுபடுத்திப் பார்க்கவேண்டும்.

அண்மையில் குருநகர் மீனவர்கள் மத்தியில் பேசிய மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்திய மீனவர்களை இழக்கவும் பிழக்கவும் படகுகள் தருகின்றேன் என்று மீனவர்களைத் தூண்டிவிட்டார். அவர் குறிப்பிட்டபடி இரண்டு வாரங்களுக்குள் இந்திய மீனவர் படகுகளை அவர் கொடுக்கவில்லை என்றாலும், இந்திய கடல்வள அமைச்சர் யாழ்ப்பாணம் வந்திறங்கிய அன்று 4 படகுகளை அவர் இங்குள்ள மீனவர் சங்கங்களுக்கு வழங்கியிருந்தார்.

அப்படி வழங்கப்பட்ட படகுகளில் சில வடமராட்சியைச் சேர்ந்த மீனவர் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டன. இன்று அதே வடமராட்சிக் கடலையொட்டியே இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டும் உள்ளார்கள். தலைவர்கள் பொறுப்போடு கருத்துக்களை உதிர்க்கவேண்டியதன் அவசியத்தை இப்போதாவது புரிந்துகொள்ளவேண்டும். தலைவர்கள் விபரீதத்தை விதைத்தால் விளைவுகள் எப்படிப் போய் நிற்கும் என்பதற்கு இதுவொரு நல்ல உதாரணம்

இந்தப் பிரச்சினை இன்னும் வளர்ந்து பெரிதாவதற்கு முன்பாக, அதனைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய தரப்புக்களோடு பேசி சட்ட ரீதியில் அனைத்தையும் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

# ரணிலிடம் 12 ஆண்டுகள் ஆட்சியை கொடுத்தால்...

## கனவு காண்கிறார் வஜிர அபேவர்தன



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எதிர் வரும் 12 ஆண்டுகளுக்கு நாட்டின்ஆட்சிஅதிகாரத்தை மக்கள் வழங்கினால் இலங்கை ஆசியாவிலும், உலகிலும் பலம் மிக்க நாடாக உயர்வடையும்.

மக்கள்அறிவுடன்சிந்தித்துசெயற்படுவார்களாயின் இந்த மாற்றம் நிச்சயம் இடம்பெறும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது எம்மால் வழங்கப்பட்ட எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பான துண்டு பிரசுரங்களில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பாதை தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்தோடு 2015 இல் எம்மால் ஆரம்பிக்கப்பட்ட பயணத்தை மாற்ற வேண்டாம் என்றும் , அவ்வாறு மாற்றினால் நாடு வீழ்ச்சியடையும் என்பதையும் குறிப்பிட்டிருந்தோம்.

திறைசேரியில் 300 கோடி டொலர் கையிருப்புடனேயேஅன்றுஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியைக்கையளித்தார்.

இன்று இந்தியா உலகில் பெரும் வளர்ச்சியடைந்துள்ள நாடாகியுள்ளது. இந்தியாவிடம் 4 ஆயிரம் கோடி டொலர் நிலையான கையிருப்புகாணப்படுகிறது. உலகில்அந்நாடுஐந்தாவது இடத்தில்உள்ளது. ஆனால் இலங்கை மக்கள் என்ன செய்தனர்? 300 கோடி டொலர் இருப்பை பேணிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைஅரசியலிலிருந்து ஒதுக்கினர்.

அவர் ஜனாதிபதி யாவதற்கு முன்னர் நாம் இது தொடர்பில் அவரிடம் வினவியபோது,நாம்சென்ற பாதையை மாற்றினால் 2023 இல் மீண்டும் எமக்கு நாட்டை கட்டியெழுப்ப வேண்டியேற்படும் என்று குறிப்பிட்டார். எனினும் 2022 இலேயே அந்த பொறுப்பை ஏற்க வேண்டியேற்பட்டது.

இலங்கை மக்கள் அறிவுடன் சிந்தித்து எதிர்வரும் 12 ஆண்டுகளுக்கு நாட்டை ஆட்சி செய்யும் அதிகாரத்தை ரணிலுக்கு வழங்கினால்ஆசியாவிலும், உலகிலும் பலம் மிக்க நாடாக நாட்டை உயர்த்துவார். இலங்கையை முட்டாள்களே ஆட்சி செய்ய வேண்டும் என்று சர்வதேசம்எண்ணக்கூடும். இலங்கை ஆசியாவில் வளர்ச்சியடைந்த நாடாகிவிடக் கூடும் என்பதே இவ்வாறான எண்ணத்துக்கான காரணமாகும். எனவேதான் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியை சர்வதேசம்கூட சில சந்தர்ப்பங்களில் விரும்புவதில்லை. - என்றார்.

# மக்கள் சக்தியின் பொருளாதார திட்டம் நாணய நிதியத்திடமும் சமர்ப்பிப்பு!



நாட்டின் எதிர்காலத்துக்காகத் தயாரிக் கப்பட்டுள்ள பொருளாதார வேலைத்திட்டத்தை சர்வதேசநாணய நிதியத்திடமும் சமர்ப்பித்துள்ளோம்.

சர்வதேசநாணயநிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்ற போதிலும், அதன் சகல நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்தமுடியாதுஎன்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றஉறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில்இடம்பெற்ற ஊடகவியலாளர்மாநாட்டில் இதனைத்தெரிவித்த அவர் மேலும்குறிப்பிடுகையில்–

உலகப் பொருளாதாரத்தில் இலங்கை அங்கத்துவம் வகிக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும். அவ்வாறு செய்தால் மாத்திரமே டொலர்வருமானத்தைஅதிகரித்துக்கொள்ள முடியும். உலகில் ஒரு பங்காளியாகவே இலங்கையைக் கட்டியெழுப்ப முடியும். எமது இந்த வேலைத் திட்டங்கள் தொடர்பில் மக்களுடன் கலந்துரையாட எதிர்பார்க்கின்றோம்.

அரசநிறுவனங்களின் செலவுகளைக் கட்டுப்படுத்தல் , இலங்கை விமானசேவைபோன்றவற்றை தனியார் மயப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு பரிந்துரைகளை எமது பொருளாதார திட்டத்தில் உள்ளடக்கியுள்ளோம். அத்தோடு தனியார் நிறுவனங்களுக்கு முதலீட்டு வாய்ப்புக்கள் அதிகரிக்க வேண்டும். மேலும் மீள் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி துறையைமேம்படுத்துவதில் அவதானம் செலுத்த வேண்டும். மீள் புதுப்பிக்கத்தக்க மின் சக்தி மூலம் அதிகளவு டொலர் வருமானம் ஈட்டும் நாடுகளுக்கு சிறந்தஉதாரணம்பூட்டான் , நேபாளம் என்பனவாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் அதன் அனைத்து நிபந்தனைகளையும் அங்கீகரிக்க முடியாது.

சர்வதேச நாணய நிதியம் நாட்டின் அரசியல் நிலைவரம் தொடர்பில் கவனத்தில் கொள்ளாது. ஆனால் ஸ்திரமான அரசாங்கம் இருந்தால் தொடர்ந்தும்பயணிப்பதற்கு நடவடிக்கைஎடுக்கமுடியும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாடு என்ன என்பதுதொடர்பில்இன்னும் எமக்குத் தெரியாது. அதனை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் நிதி பற்றிய குழுவிற்கு மீண்டும் அதே உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டால், இது தொடர்பான நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்வோம். சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்துள்ள வரிக்கொள்கையை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. சுமார் 4–5 லட்சம் மாதவருமானம் பெறுவர்களுக்கு கூட 52 சதவீத வரியை அறவிட முடியும்.

அதற்கான மாற்று வேலைத்திட்டம் எம்மிடமுள்ளது. எமது இந்த பொருளாதார வேலைத்திட்டத்தை நாம் சர்வதேச நாணய நிதியத்திடமும் சமர்ப்பித்துள்ளோம். எமது வேலைத்திட்டங்களுடன் இணக்கப்பாடுஎட்டப்பட்டால் தொடர்ந்தும் பயணிக்க முடியும். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கோகினூர் வைரம் இல்லாத முடியை தெரிந்த ராணி



பிரிட்டனின் ராணியாக நீண்டகாலம் பதவி வகித்தவரான ராணி எலிசபெத் உயிரிழந்தைத் தொடர்ந்து முடிசூட்டு விழாவின்போது அணிவதற்கு கோஹினூா வைரம் இல்லாத மணிமகுடத்தை அந்நாட்டு அரசி கமீலா தோவு செய்துள்ளாா்.

உலகின்பெரியவைரங்களில்ஒன்றாககோஹினூா் வைரம் திகழ்கிறது. 105.6 கேரட் எடை கொண்ட இந்த வைரம், காலனி ஆட்சி காலத்தில் கிழக்கிந்திய கம்பெனியால் இந்தியாவில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டுபிரிட்டன்முன்னாள் அரசி விக்டோரியாவுக்குப் பரிசாக அளிக்கப்பட்டது. அதனை திருப்பி அளிக்குமாறு பிரிட்டனிடம் இந்தியா கோரியுள்ளது.

இந்த வைரத்துக்கு ஆங்கிலேயா ஆட்சியின் போது இந்தியாவின் அங்கமாக இருந்த பாகிஸ்தானும் உரிமை கோருகிறது. அத்துடன் இந்தியா சுதந்திரம் பெற்றது முதல், அந்த வைரத்துக்கு ஆப்கானிஸ்தானும் உரிமை கோரி வருகிறது.

இந்நிலையில், வரும் மே மாதம் பிரிட்டன் தலைநகர் லண்டனில் அந்நாட்டு அரசராக சார்லஸுக்கும், அரசியாக சார்லஸின் மனைவி கமீலாவுக்கும் முறைப்படி முடிசூட்டப்பட உள்ளது. இந்த விழாவின்போது கோஹினூா வைரம் தாங்கிய மணிமகுடத்தை கமீலா அணிவாா என்று அதிகம் எதிா்பாா்க்கப்பட்டது.

இந்நிலையில், முடிசூட்டு விழாவின்போது அணிய கோஹினூா வைரம் இல்லாத மணிமகுடத்தை கமீலா தோவு செய்துள்ளதாக பிரிட்டன் அரச இல்லம் அறிவித்துள்ளது. ராஜீய காரணங்களால் அந்த வைரம் மணிமகுடத்தில் இடம்பெறுவது தவிா்க்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதன் மூலம் கோஹினூா வைரத்தைப் போன்றதொரு வைரம் மணிமகுடத்தில் இடம்பெறக்கூடும் என்று கருதப்படுகிறது.

கடைசியாக சாா்லஸின் பாட்டியும் பிரிட்டன் முன்னாள் அரசியுமான எலிசபெத் ஏஞ்செலா மாா்கரீட்டின் மணிமகுடத்தில் கோஹினூா் வைரம் இடம்பெற்றது. எலிசபெத் ஏஞ்சலொ மாா்கரீட் 2002ஆம் ஆண்டு காலமானாா்.

# பாகிஸ்தானில் தூதரகத்தை மூடியது சீனா

பாகிஸ்தானில் உள்ள தூதரக அலுவலகத்தை தற்காலிகமாக மூடுவதாக சீனா அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை இணைய தளத்தில் வெளியிட்டுள்ள சீனா, தொழில்நுட்ப காரணங்களுக்காக இஸ்லாமாபாத்தில் உள்ள தூதரகப் பிரிவை மூடுவதாகத் தெரிவித்துள்ளது. தொழில்நுட்ப காரணங்கள் குறித்து விளக்கம் அளிக்காததோடு, மறு அறிவிப்பு வரும் வரை தூதரகப் பிரிவு மூடப்பட்டிருக்கும் என்றும் கூறியுள்ளது.

சீனாவை அரபிக் கடலோடு இணைக்கும் நோக்கில் சீனா – பாகிஸ்தான் பொருளாதார பாதை எனும் திட்டத்தை சீன அரசு மேற்கொண்டு வருகிறது. 65 பில்லியன் டொலர் மதிப்பிலான இந்த பெருந்திட்டத்தின் மூலம், பாகிஸ்தானின் சாலைகள், ரயில் பாதை, துறைமுகங்கள் ஆகியவை இணைப்பதற்கான நடவடிக்கைகளை சீனா எடுத்து வருகிறது. அதோடு, இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக எரிவாயு குழாய்களையும் அது பதித்து வருகிறது.

ஏராளமான சீனர்கள் பாகிஸ்தானிற்குச் சென்று இந்தப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும், இந்த திட்டத்திற்கு பாகிஸ்தானில் இயங்கி வரும் பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. பாகிஸ்தானில் உள்ள சீனர்களை குறிவைத்து தாக்குதல்களும் நடைபெற்று வருகின்றன.

கராச்சியில் ஆசிரியராக பணியாற்றி வந்த 3 சீனர்கள் தற்கொலைப் படைத் தாக்குதல் மூலம் கடந்த ஆண்டு ஏப்ரலில் கொல்லப்பட்டனர். பெண் ஒருவர் இந்தத் தற்கொலைப் படை தாக்குதலை நடத்தியது விசாரணையில் தெரிய வந்தது. ஆப்கனிஸ்தானில் ஆட்சியில் இருக்கும் தலிபான்கள், பாகிஸ்தானிலும் வலுவடைந்து வருகின்றனர்.

இவர்கள் பாகிஸ்தான் தலிபான்கள் என தனி பிரிவாக இயங்கி வருகிறார்கள். இதனால், கடந்த ஆண்டில் இருந்து பாகிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

தற்போது பாகிஸ்தான் பொருளாதார ரீதியாகவும் பெரும்நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. இதனால், பயங்கரவாத அமைப்புகள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு, பாகிஸ்தானில் உள்ள சீனர்களை மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு சீனா கடந்த வாரம்தான் அறிவிப்பு வெளியிட்டது. இந்நிலையில், அந்நாடு பாகிஸ்தானில் உள்ள தூதரகத்தை தற்காலிகமாக மூடி இருக்கிறது.



# படகு கவிழ்ந்து குடியேறிகள் 75 பேர் சாவு

## லிபியக் கடலில் பரிதாபம்

ஐரோப்பிய நாடுகளை நோக்கி வந்துகொண்டிருந்த அகதிகள் படகு, லிபியா அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 75 பேர் உயிரிழந்தனர் ஐ.நா. தெரிவித்தது.

இது குறித்து, ஐ.நா. குடியேறிகள் நல அமைப்பு (ஐஓஎம்) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐரோப்பிய நாடுகளில் அடைக்கலம் பெற விரும்பிய அகதிகளை சட்டவிரோதமாக ஏற்றிவந்த படகு லிபியா அருகே மத்தியதரைக் கடல் பகுதியில் செவ்வாய்க்கிழமை கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில், 75 அகதிகள் கடலில் மூழ்கி உயிரிழந்தனா. அவாகளில் 11 பேரது உடல்களை லிபியா மீட்புக் குழுவினா புதன்கிழமை மீட்டனர். இந்த விபத்தில் 7 அகதிகள் உயிா தப்பி, லிபியா கடற்கரைக்கு வந்து சோந்தனர். மிகவும் மோசமான உடல்நிலையுடன் காணப்பட்ட அவாகள் அனைவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போா மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்ட ஆப்பிரிக்கா மற்றும் மேற்கு ஆசிய நாடுகளைச் சோந்த ஏராளமானவாகள், ஐரோப்பிய நாடுகளில் அடைக்கலம் தேடி மத்தியதரைக் கடல் வழியாக ஆபத்தான பயணம் மேற்கொண்டு வருகின்றனா.

அண்மைக் காலமாக, அத்தகைய அகதிகளை சட்டவிரோதமாக அழைத்துச்செல்வதற்கான போக்குவரத்து மையமாக லிபியா உருவாகிவருகிறது.

### ரஷ்ய படைகளை இழிவுபடுத்தினாராம்

# பத்திரிகையாளருக்கு 6 ஆண்டுகள் சிறை

ரஷ்ய இராணுவத்தை இழிவுபடுத்திய குற்றச்சாட்டின்பேரில், பத்திரிகையாளா ஒருவருக்கு 6 ஆண்டுகள் சிறைத் தண்டனைவிதிக்கப்பட்டது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரை விமாசிப்போா மீது அதிபர் விளாடிமீா புடின் தலைமையிலான அரசு கடும் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை குறித்து தவறான தகவல் தருவோருக்கு தண்டனை விதிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் சட்டமும் கொண்டுவரப்பட்டது.

அந்த வகையில், மரியா பொனோமரன்கோ என்ற பத்திரிகையாளா ரஷ்ய இராணுவத்தை இழிவுபடுத்தியதாகக் குற்றம்சாட்டப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டின்பேரில், அவருக்கு தெற்கு சைபீரியாவில் உள்ள பாா்னௌல் நீதிமன்றம் 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து புதன்கிழமை உத்தரவிட்டது. இதேபோன்ற குற்றச்சாட்டில் மாஸ்கோ நகராட்சிசபை உறுப்பினா அலெக்ஸி கோரினோவ் என்பவருக்கு இந்த ஆண்டு தொடக்கத்தில் 7 ஆண்டுகளும், எதிா்க் கட்சியை சோந்த இல்யா யாசின் என்பவருக்கு கடந்த டிசெம்பரில் 8 ஆண்டுகளும் சிறைத் தண்டனைவிதிக்கப்பட்டது.



# வடகொரிய அதிபரின் கிம்மின் மகள் பெயரை வைக்கத் தடை

வடகொரியா வித்தியாசமான உத்தரவுகளுக்கு பெயர் பெற்ற நாடு. அந்த வகையில் புதிதாக ஒரு நூதன அறிவிப்பை வெளியிட்டுள்ளது வடகொரியா. அந்த உத்தரவின்படி, அந்நாட்டு தலைவர்களின் பெயரை இனி அந்நாட்டு மக்கள் வைப்பதற்கு தடை விதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது கிம்மின் மகளின் பெயரை வைத்திருக்கும் பெண்கள், சிறுமிகள் தங்கள் பெயரை மாற்றிக் கொள்ளுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா ககக் கூறப்படுகிறது. இதுகுறித்து வடகொரியா அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

கிம் ஜு ஏ என்ற பெயருள்ள பெண்கள் மற்றும் சிறுமிகள் தங்கள் பெயரை மாற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். ஒருவாரத்திற்குள் அவர்கள் தங்கள் பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



கிம் தனது குழந்தைகளின் புகைப்படங்களை கடந்த சில ஆண்டுகளாக வெளியிடாமல் இருந்து வந்தார்.

இந்த நிலையில் சில மாதங்களாக கிம்மின் மகள் கிம் ஜு ஏ பொதுவெளியில் தனது தந்தையுடன் வலம் வருவதைப் பார்க்க முடிகிறது.

வடகொரியா தீவிரமான கம்யூனிஸ்ட் ஆட்சி நடக்கும் நாடு. அங்கு ஊடகங்களின் செய்திகூட அரசின் தணிக் கைக்குப் பின்புதான் வெளியாகும். கிம்மின் தந்தையும் முன்னாள் அதிபருமான 2ஆம் கிம் 201ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இறந்தார். அவர் உயிரிழந்த 2 நாட்களுக்குப் பின்புதான் அந்த செய்தி வெளியுலகிற்கே தெரிந்தது. அப்படி வடகொரியாவிலிருந்து எளிதாக எந்த செய் தியும் கசிந்துவிடாது. மேலும் அங்கு அர சுக்கு எதிரான நடவடிக் கைக ளில் ஈடுபடும் மக்களுக்குத் தூக்குத் தண்டனை தயவு தாட் சண்யம் இன்றி வழங் கப்ப டும் என்பதால் செய்திகள் வெளியாவது கடினம். இதனை சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் கடுமையாக விமர்சித்தன. ஆனால் இந்த குற்றச்சாட்டை வடகொரியா மறுத்து வருகிறது.



# மின்சாரம் தாக்கி யானை இறப்பு!

## செட்டிக்குளத்தில் சம்பவம்

செட்டிகுளம், முசல்குத்தி வீதியில் மின்சாரம் தாக்கி 30 வயது மதிக்கத்தக்க யானை ஒன்று இறந்த நிலையில் நேற்று (புதன்கிழமை) மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, செட்டிகுளம், முசல்குத்தி பகுதியில் உள்ள வயல் நிலங்களைச் சூழ போடப்பட்ட மின்சாரக் கம்பியில் சிக்கிய காட்டு யானை ஒன்று அந்தப் பகுதியில் விழுந்து இறந்துள்ளது. அந்தப் பகுதிக்கு சென்றவர்கள் இதனை அவதானித்த நிலையில் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் கால்நடை வைத்திய அதிகாரி உள்ளிட்டோர் சம்பவ இடத்துக்குச் சென்று யானையைப் பார்வையிட்டபோது யானை இறந்திருந்தது. வயல் நிலங்களுக்கு வைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கியே யானை மரணமடைந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இருப்பினும், யானையின் மரணம் தொடர்பில் கால்நடை வைத்திய அதிகாரியால் உடற்கூற்று பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. 30 வயது மதிக்கத்தக்க ஆண் யானையே இவ்வாறு இறந்துள்ளது. இது தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பிரதேச சபை தலைவர் உடன் இடைநிறுத்தம்!

மாவனல்லை பிரதேச சபையின் தலைவர் நோயல் தசந்த ஸ்டீபன் உடனடியாக அமுலுக்குவரும் வகையில் அந்தப் பதவியில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவை சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ளார்.

இதன்படி, பிரதேசசபையின்தலைவரின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அதன் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் உப தலைவர் கோரளகெதர பியதிஸ்ஸ நியமிக்கப்பட்டுள்ளார்.

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் மாவனல்லை பிராந்திய சபையின் தலைவர் நோயல் தசந்த ஸ்டீபன் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன்படி, 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை சட்டத்தின் 185 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களை தலைவர் தனது கடமைகளை செய்யும் போது செய்தாரா என்பதை ஆராய்வதற்காக ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ரோஹன அநுரகுமார நியமிக்கப்பட்டுள்ளார்.

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டவுடன் தேர்தல்!

## செஹான் சேமசிங்க தெரிவிப்பு



நிதிநெருக்கடிக்குமத்தியில் நாணயம் அச்சிட்டு தேர்தலை நடத்தினால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை உரிய காலப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும்.

பொருளாதார நெருக்கடிக்கு ஒப்பீட்டளவில் தீர்வு கண்டவுடன் தேர்தலை நடத்துவது அரசாங்கத்தின் பிரதான இலக்காக உள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் வினவியபோதே மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க தேர்தல்கள் ஆணைக்குழு கோரும் பெருந்தொகையான நிதியை ஒதுக்க முடியாத நிலை காணப்படுகிறது.

பல மில்லியன் கணக்கான நிதியை ஒரே கட்டத்தில் ஒதுக்கும் போது அரச சேவைகளுக்குத் தேவையான நிதியை ஒதுக்குவதில் பாதிப்பு ஏற்படும்.

நிதி நெருக்க டிக்கு மத்தியில் தேர்தலுக்கு நிதி ஒதுக்கினால் அரச சேவையா குளர்களுக்கு சம்பளம் மற்றும் நலன்புரி சேவைகளுக்கு நிதி ஒதுக்குவது சிக்கலாகும், அது சமூக கட்டமைப்பில் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

ஆட்சியாளர்கள் என்ற ரீதியில் தற்போது மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய பொறுப்பு எமக்குண்டு.

ஒரு மாதத்துக்குத் தேவையான அரச செலவுகளை ஈடு செய்வதற்கு பெரும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ள பின்னணியில் நாணயம் அச்சிட்டு தேர்தலை நடத்தினால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெறுவது பாதிக்கப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை எதிர்வரும் மாதம் 31 ஆம் திகதிக்குள் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

பொருளாதார நெருக்கடிக்கு ஒப்பீட்டளவில் தீர்வு கண்டவுடன் தேர்தலை நடத்துவது ஆட்சித் தரப்பின் பிரதான இலக்காக உள்ளது. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் பாதிப்பு மேலும் ஏற்படும் போது அதற்கு யார் பொறுப்பு கூறுவது. - என்றார்.

# கருணாவின் கருத்து



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிர பாகரன் உயிருடன் இருக்கிறார் என வெளியான தகவல் தொடர்பில் கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளி தரன் தமது கருத்தை வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் உயிருடன் இருப்பதாக பழ நெடுமாறன் ஊடகங்களுக்கு தெரிவித்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். விடுதலைப்புலிகளின் தலைவர் களத்தில் மடிந்தது என்பது உண்மையான விடயம், அது பெருமை யானது என்பதே எனது கருத்து.

புலிகளின் தலைவர் தொடர்பாக பிழையான வதந்திகளைப் பரப்பி உலக மக்களை முட்டாளாக்கும் செயற்பாடாகத் தான் பழ நெடுமாறன் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்தை நான் பார்க் கின்றேன். இது ஒரு தவ றான விடயம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் இந்தியர்களின் இசைக் கச்சேரி!

(பழுவூரான்)

மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தியக் கலை ஞர்கள்பங்குபற்றும் கர் நாடக சங்கீதக் கச்சேரி நாளை வெள்ளிக்கிழமை சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப் புலவர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி தலைமையில்இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தலைமை அதிதியாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

வி.அருந்ததியின் இவ்விசைக்கச்சேரியில் அணிசெய் கலைஞர்க ளாக வயலின் வைக்கியம் பத்மாகிருஷ்ணன், மிரு தங்கம் கலாநிதி ஜி.பாபு, கஞ்சிரா கடநாடு அனந்தகிருஷ்ணன், கடம் வாழப்பள்ளி கிருஷ்ணகுமார் ஆகியோர் பங்கேற்பர்.

# கம்பளை ஏரிஎம் கொள்ளை; சந்தேகநபர்கள் 7 பேர் கைது!

துப்பாக்கி சகிதம் கம்பளை நகரில் கடந்த மாதம் 24 ஆம் திகதி தனியார் வங்கியிலிருந்த 76 லட்சம் ரூபா பணத்துடன் பணப்பரிமாற்று இயந்திரத்தை கொள்ளையிட்டுச் சென்ற சந்தேகநபர்கள் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சந்தேக நபர்கள் 7 பேரையும் கம்பளை மாவட்ட நீதிமன்ற நீதிவான் முன் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் ஏழுபேரில் நான்குபேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அதில் இரட்டையர்கள் இருவரும் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையிலிருந்து சந்தேக நபர்கள் இதற்கு முன் கலஹாவில் இடம்பெற்ற ஒரு வங்கிக் கொள்ளை, இரு நகைக்கடை கொள்ளைகளுடனும் தொடர்பு பட்டிருந்தமை தெரியவந் துள்ளது.



கொள்ளையிடப்பட்ட பணத்தில் சந்தேக நபர் களால் கொள்வனவு செய்யப்பட்ட 18 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவிற்கு வான் ஒன்று மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள், இரண்டு தங்கச்சங்கிலிகள், மோதிரம் ஒன்று என்பனவற்றை பொலிஸார் மீட்டுள்ளதோடு, பணப்பரிமாற்று இயந்திரமும் கலஹா ஆல்வத்தை பிரதேசத்தில் சுமார் 100 மீற்றர் பாரிய பள்ளத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

மேலும், பிரதான சந் தேக நபரிடமிருந்து மீட்கப்பட்ட துப்பாக்கி அண்மையில் காலிமுகத்திடல் போராட்டத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் வீட்டை முற்றுகையிட்ட சந்தர்ப்பத்தில் திருடப்பட்டது எனவும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களின் 7 பேரில் கலஹா கிரேட்வெளி தோட்டத்தைச் சேர்ந்த மூவரும் நான்கு பேர் புத்தளத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இதில் புத்தளத்தைச் சேர்ந்த பிரதான சந்தேக நபர் கொள்ளையிட்ட பணத்தில் தான் திருமணம் முடிக்க நிச்சயிக்கப்பட்ட பெண்ணுக்கு தங்கச்சங்கிலி, கையடக்க தொலைபேசி மற்றும் ஒரு லட்சம் ரூபா பணமும் கொடுத்துள்ளமை விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

# எதிர்கால சந்ததியினருக்காக நீர்வளத்தை காக்க வேண்டும்!

## அமைச்சர் ஜீவன் திடசங்கற்பம்



நீர் முகாமைத்துவம் தொடர்பில் தற்போது நிலவும் பிரச்சினைகளால், நீர் வீண்விரயமாவதுடன், நீர் மாசடைதலும் அதிகரித்துள்ளது.

எனவே, எமது எதிர்கால சந்ததியினருக்காக நீர்வளத்தை பாதுகாக்க வேண்டியது எம் அனைவரினதும் தலையாய கடமையாகும் என நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தேசிய நீர் கொள்கைத் திட்டமொன்றை உருவாக்குவதற்கான கலந்துரையாடல் மகாவலி அதிகார சபையில் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலின் போது, நீர்வழங்கல் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆலோசனை வழங்கினார்.

இதன்போது, தேசிய நீர் கொள்கையொன்றை உருவாக்குவதற்கு உரிய தரப்பினருக்கு பொறுப்புக்களையும் வழங்கத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும், பஸ்னாகொட நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் நிலத்தடி நீர்த்தேக்கத் திட்டம் ஆகியவற்றின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார நீர்ப்பாசனத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் எஸ்.சமரதிவாகர, நீர்பாசன அமைச்சின் செயலாளர் யூ.டி.சி. ஜயலால், தேசிய நீர் வழங்கல் சபையின் தலைவர் என். ரணதுங்க, இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கீர்த்தி பி. கொடகம, நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் டி.பி.திரிமஹாவிதான, நீர் வழங்கல் சபையின் முகாமையாளர் திருமதி. வசந்த இளங்கசிங்க உட்பட அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# சிறைகைதிகளின் நெல் அறுவடை!

மட்டக்களப்பு சிறைச்சாலையில் உள்ள சிறைக்கைதிகளால் செய்கையிடப்பட்ட நெற்பயிர்களின் அறுவடை விழா நேற்று (புதன்கிழமை) காலை சிறைச்சாலை அத்தியட்சகர் தலைமையில் நடைபெற்றது.

சிறைச்சாலைக்கு சொந்தமான திருப்பெருந்துறையில் உள்ள காணியில் சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இயற்கை முறையிலான இந்த நெற்பயிர்ச் செய்கை சிறந்த விளைச்சலை தந்திருப்பதாக சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.

பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து இந்த வேளாண்மை அறுவடை விழா இடம்பெற்றுள்ளது.

இந்த அறுவடை நிகழ்வில் சிறைச்சாலை அதிகாரிகள், மாவட்ட கமத்தொழில் அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

# அமைதியை குலைத்து தேர்தலை பிற்போட ரணில் திட்டம்

## சம்பிக்க எச்சரிக்கை



நாட்டில் அமைதியற்றதன்மையை ஏற்படுத்தி தேர்தலை முழுமையாக பிற்போட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கவனம் செலுத்தி வருகிறார். மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும். நிறைவேற்று அதிகாரம் தேர்தலைப் பிற்போடும்போது அதன் விளைவு பாரதூரமாக அமைந்த வரலாற்றுச் சம்பவங்கள் நாட்டில் பல உள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டிய பகுதியில் உள்ள 43ஆவது படையணியின் காரியா லயத்தில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத் துரைக்கை யில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசமைப்பின் பிரகாரம் உரிய காலத்துக்குத் தேர்தல் இடம்பெறாதபோது நாட்டில் சிவில் போராட்டம் தோற்றம் பெற்ற பல சம்ப வங்கள் தோற்றம் பெற்றன.

1975ஆம் ஆண்டு இடம்பெற வேண்டிய பொதுத் தேர்தலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி பிற் போட்டதால் நாட்டில் பெரும் சிவில் போராட்டம் தோற்றம் பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன, பொதுத்தேர்தலை பிற் போட்டதால் நாட்டில் பெரும் கலவரங்கள் தோற்றம் பெற்றன. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசு தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பைக் கட்டவிழ்த்து விட்டு அதன் பழியை மக் கள் விடுதலை முன்னணி மீது சுமத்தியது.

விளைவு 60 ஆயிரம் உயிர்களை பலியெடுத்தது. 30 வருடகால யுத்தத்தை தோற்றுவித்தது, ஆகவே நிறைவேற்றுத்துறை அதிகாரம் தேர்தலை பிற் போடும் போது அதன் விளைவு பாரதூரமாகவே காணப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட்டால் நாட்டின் சிவில் போராட்டம் தோற்றம் பெறும். நாட்டு மக்களை இராணுவத்தைக் கொண்டு அடக்க முடியாது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புரிந்துகொள்ளவேண்டும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் ஓட்டத்தைக்கண்டு விளங்கிக்கொள்ள வேண்டும்.

தேர்தலைக் கோரி அமைதி வழி போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் மத்தியில் முரண்பாடுகளைத் தோற்றுவித்து, நாட்டின் அமைதியற்றதன்மையை உருவாக்கி, அதனைக் காரணமாக கொண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நிரந்தரமாகப் பிற்போட அரசாங்கம் குறிப்பாக ஜனாதிபதி அக்கறை காட்டுகிறார் இந்த ஆட்சியின் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கு பொலிஸார் முழுமையான ஆதரவு வழங்குவார்கள், ஆகவே நாட்டு மக்கள் அவதா னத்துடன் செயற்பட வேண் டும். -- என்றார்.

# ஜோசப்புக்கு சமாதான பரிசு

சமாதானம், அமைதி, நீதி மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு அச்சமற்ற இணழிக்கத்துடன் ஆக்கபூர்வமாக உழைத்தவர்களுக்காக உலக மெதடிஸ்த பேரவையால் வழங்கப்படும் உலக மெதடிஸ்த அமைதிக்கான பரிசு இம்முறை இலங்கையின் மெதடிஸ்த திருச்சபையின் தலைவரான அருட் பணி எபனேசர் ஜோசப்புக்கு வழங்கப்படவுள்ளது. இந்தப் பரிசை பெறும் முதல் ஆசிய நாட்டவர் என்ற சிறப்பையும் இவர் பெறுகிறார்.

உலகெங்கிலும் உள்ள சுமார் 8 லட்சம் மெதடிஸ்ட் பக்தர்களால் கௌரவிக்கப்படுகின்ற இந்தப் பரிசானது, 1977 இல் அறிமுகமானது. உலகில் அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்காக தங்களை அர்ப்பணித்தவர்களைப் பாராட்டி கௌரவிப்பதற்காக உலக மெதடிஸ்த திருச்சபையால் வழங்கப்பட்டு வருகிறது.

அமெரிக்கா, எகிப்து, இங்கிலாந்து, ஸிம்பாப்வே, கொரியா, அயர்லாந்து, ஜேர்மனி, இஸ்ரேல், தென் ஆபிரிக்கா, கானா, ஆர்ஜென்டினா, சியரா லியோன், பிரேஸில், ஆஸ்திரேலியா, நைஜீரியா, கென்யா, பொலிவியா போன்ற நாடுகளை சேர்ந்தவர்கள் இந்தப் பரிசை பெற்றுள்ளனர்.

அந்த வகையில், இந்தபரிசை இதற்கு முன்னர் நெல்சன் மண்டேலா, ஜிம்மி கார்ட்டர், மைக்கேல் கோர்பச்சேவ், கோபி அனான் ஆகியோர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு 38 தடவைகள் வழங்கப்பட்டுள்ள இந்த பரிசை பெறும் முதல் ஆசிய நாட்டவர் மற்றும் முதல் இலங்கையர் என்ற சிறப்பை அருட்பணி எபனேசர் ஜோசப் பெறுகின்றார்.

நுவரெலியா கந்தபொலவில் பிறந்த எபினேசர் ஜோசப், கொழும்பு வெஸ்லி கல்லூரியில் தனது ஆரம்ப மற்றும் உயர்கல்வியை கற்றார்.

பின்னர், தமிழ்நாட்டில் உள்ள இறையியல் நிறுவனத்தில் உயர் கல்வியை தொடங்கி பல பல்கலைக்கழகங்களில் பட்டங்களை பெற்றார்.

பரிசு வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு வெஸ்லி கல்லூரியில் உலக மெதடிஸ்த திருச்சபையின் ஆயர் கே.ஜே.பார்க் மற்றும் அதன் செயலாளர் நாயகம் ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

அருட்பணி ஐவன் ஆபிரகாம் (ஆபிரிக்கா) மற்றும் உலக மெதடிஸ்த திருச்சபையின் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் இந்நிகழ்வு நடைபெறவுள்ளதாக இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பொதுச் சபையின் செயலாளர் அருட்பணி லெஸ்லி தாரிஜு தெரிவித்தார்.

# சிவராத்திரி கொடி வாரம் அனுஸ்டிப்பு



(கல்லடி நிருபர்)

மகா சிவராத்திரியை முன்னிட்டு அகில உலக இளம் சைவ மன்றத்தினால் சிவராத்திரி தின விழிப்புணர்வு கொடிவாரம் நேற்றுத் தொடங்கப்பட்டது.

வருடாந்தம் அனுஸ்டிக்கப்படும் இந்தக் கொடிவாரம் இவ்வருடம் மட்டக்களப்பு மாவட்டச் செயலர் திருமதி கலாமதி பத்மராஜாவுக்கு கொடி வழங்கப்பட்டதுடன் தொடங்கியது.

உலக இளம் சைவ மன்றத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி நல்லசாமி பிரதீபன் ஐயர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கீ.குணநாயகம்,

மன்றத்தின் பொருளாளர் பீ.ஜெயகாந்தன், மன்றத்தின் பிரதிநிதிகளான செல்வி எஸ்.சாம்பவி, செல்வி வி.நியோமிதா கலந்துகொண்டனர்.

இதன்போது இளம் சைவ மன்றத்தின் இலட்சனை பொறிக்கப்பட்ட நினைவுச்சின்னமும் அரசாங்க அதிபரிற்கு வழங்கிக்கப்பட்டது. அனைத்து சமய நம்பிக்கைகளை உள்ளடக்கிய உலகெலாம் எனும் நூலின் பிரதியினை அதன் ஆசிரியர் கலாநிதி நல்லசாமி பிரதீபன் ஐயர் மாவட்ட செயலருக்கு வழங்கி வைத்தார்.

# திருமலை வேட்பாளர்களுக்கு நேற்று அறிமுகக் கருத்தரங்கு



(ஹஸ்பர்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் அனைத்துக் கட்சிகளில் இருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களுக்கான அறிமுகக் கருத்தரங்கு ஜூபிலி மண்டபத்தில் நேற்று நடந்தது.

தேசிய சமா தான பேரவையின் அனுசரணையுடன் சேவிங் ஹியூமானிட்டி பவுன்டேசன் கிண்ணியா அமைப்பினரின் ஒருங்கிணைப்பில் இந்தக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கட்சியில் இருந்தும் தலா 03 வேட்பாளர்களும் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேச சர்வமதக் குழுமத்தின் உறுப்பினர்கள் இந்தக் கருத்தரங்குக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சமாதானம், இன ஐக்கியம், சகவாழ்வு மற்றும் பன்மைத்துவம் போன்றவற்றைக் கட்டியெழுப்புவதற்கான பல்வேறு செயற்திட்டங்களையும், பயிற்சிகளையும் தேசிய சமாதான பேரவை பிரதேச மட்டங்களில் மேற்கொண்டு வருகிறது.

அவ்வாறான செயற்றிட்டங்களில் ஒன்றான மத சகவாழ்வுக்கான முன்னெடுப்பு (ARC) எனும் இச்செயற்திட்டத்தில் சர்வமத குழுவின் நோக்கு, அதன் இலக்கு, சமூக அங்கீகாரம், உள்ளக ஒற்றுமை, குழுச்செயற்பாடு மற்றும் பெறுபேறு தொடர்பில் விரிவான விளக்கமளிக்கப்பட்டதுடன் பங்குபற்றுனர்களுக்கிடையிலான குழுச் செயற்பாடுகளும் இடம்பெற்றன.

# சட்டவிரோத மதுபானத்துடன் வசாவிளானில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம் பலாலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வசாவிளான் பகுதியில் கசிப்புடன் ஒருவர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது ஆயிரத்து ஐந்நூறு மில்லிலீற்றர் கசிப்புடன் 45 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேகநபர் வீதியால் கசிப்பைக் கொண்டு சென்ற போது காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பலாலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# போதைப்பொருளுடன் ஒருவர் நவக்கிரியில் புதனன்று கைது!

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவகிரி பகுதியில் கடந்த புதன்கிழமை கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 29 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 250 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் ஏழாலை பகுதியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தலுக்கான நிதியை கட்டம்கட்டமாக வழங்கித் தேர்தல்களை நடத்த முடியும்!

## முன்னாள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கருத்து

தேர்தலுக்கான நிதியை கட்டம் கட்டமாக வழங்கி தேர்தலை நடத்த முடியும் என தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

வவுனியாவில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ள இளைஞர், யுவதிகளுடனான கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அரச அச்சகத்தின் செலவு 40 அல்லது 50 கோடி ரூபாக்களாகும். அதற்கான முற்பணம் மாத்திரமே தேர்தலுக்கு முன்னர் செலுத்தப்படும். அவ்வாறே கடந்த காலங்களில் இடம்பெற்றது. 150 மில்லியன் ரூபா முற்பணம் செலுத்தப்பட்டுள்ளதாக நான் நினைக்கின்றேன். 100 கோடி அல்லது 800 கோடி ரூபா தேர்தலுக்கு முழுமையாக செலவாகும். அவை ஒரே தடவையில் கோரப்படா.

தேர்தலுக்கு முன்னதாக 2 கோடியே 50 லட்சம் அல்லது 300 கோடி ரூபா தேவைப்படும். அந்த தொகையைப் படிப்படியாக செலுத்த முடியும். தேர்தலுககான நிதியில் நூற்றுக்கு 60 வீதம் தேர்தலுக்கு பின்னரே தேவைப்படும். அப்படியெனில் 300 கோடி ரூபா கிடைத்தால் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் அவ்வாறு இல்லாது விட்டால் கட்ட திட்டத்துக்கு அமைவு குறுகிய காலத்துக்கு தேர்தலை பிற்போட தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேரிடும். தேர்தல் நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியை ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சர் ஆகியோர் ஊடாக முற்பணத்தை மேலதிகமாகப் பெற முடியும். காசு கிடைக்கும் என நம்பிக்கை இருக்கிறது. இந்தத் தேர்தலுக்கான வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் அந்தந்த வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெறுவதால் மின்கட்டணச் செலவும் குறைவு. அரச உத்தியோகாத்தர்களைத் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தும் போது அவர்களுக்குத் தேவையான உணவு குடிதண்ணீர் போன்றவற்றை எடுத்துவருமாறு கோரி செலவை மட்டுப்படுத்த முடியும். ஆகவே, எல்லோருடைய ஆதரவுடனும் இந்தத் தேர்தலை நடத்த முடியும் எனத் தெரிவித்தார்.

# மே.இந்தியாவுக்கு எதிராக இந்திய அணி பெரு வெற்றி



நடப்பு ரி20 மகளிர் உலகக் கோப்பை தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் சுற்றுப் ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. இந்திய அணியின் தலைவர் ஹர்மன்பிரீத் கவுர் மற்றும் இலக்கு காப்பாளர் ரிச்சா கோஷ் என இருவரும் பொறுப்புடன் ஆடி வெற்றியை வசப்படுத்தினர்.

தென் ஆப்பிரிக்க நாட்டில் 8ஆவது மகளிர் ரி20 உலகக் கோப்பைத் தொடர் நடைபெற்று வருகிறது. கடந்த 10ஆம் திகதி தொடங்கிய இந்தத் தொடர் வரும் 26ஆம் திகதி வரையில் நடைபெறுகிறது. இந்தியா உட்பட மொத்தம் 10 அணிகள் இதில் பங்கேற்றுள்ளன.

இந்த தொடரில் இந்திய அணி குரூப் 'பி' பிரிவில் இடம் பெற்றுள்ளது. இந்த பிரிவில் இங்கிலாந்து, அயர்லாந்து, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் அணிகளும் இடம் பெற்றுள்ளன. பாகிஸ்தான் அணியுடனான முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது. இந்த நிலையில் நேற்று மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான போட்டி கேப் டவுனில் உள்ள நியூலேண்ட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. 20 ஓவர்களில் 6 இலக்குகள் இழப்பிற்கு 118 ஓட்டங்கள் எடுத்தது அந்த அணி. இந்திய அணி சார்பில் தீப்தி சர்மா, 3 இலக்குகளை கைப்பற்றி இருந்தார். பூஜா மற்றும் ரேணுகா என இருவரும் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றி இருந்தனர்.

119 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இந்தியா விரட்டியது. பொலி மற்றும் ஸ்மிருதி என இருவரும் இன்னிங்ஸை தொடக்கினர். ஸ்மிருதி, 10 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். தொடர்ந்து ஜெமிமா ரோட்ரிக்ஸ், 1 ஓட்டம் எடுத்து வெளியேறினார். பொலி, 23 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்தார். அப்போது இந்திய அணி 7.1 ஓவர்கள் முடிவில் 3 இலக்குகள் இழப்பிற்கு 43 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தது.

பின்னர் இணைந்த கேப்டன் ஹர்மன்பிரீத் மற்றும் ரிச்சா கோஷ், 72 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். இருவரும் நிதானமாக இன்னிங்ஸை அணுகினர். 42 பந்துகளில் 33 ஓட்டங்கள் எடுத்து ஹர்மன்பிரீத் ஆட்டமிழந்தார். தொடர்ந்து தேவிகா வைத்தியா வந்தார். இந்திய அணியின் வெற்றிக்கு தேவைப்பட்ட வெற்றிக்கான அந்த நான்கு ஓட்டங்களை ரிச்சா பவுண்டரியாக விளாசினார். 18.1 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 4 விக் கெட்டுகள் இழப்பிற்கு இலக்கை வெற்றிகரமாக எட்டியது. இதன் மூலம் இந்திய அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# சச்சின்-சூர்யா சந்தித்து பேச்சு

தமிழ் நடிகர் சூர்யாவும் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரும் சந்தித்துப் பேசினர். இது குறித்த படத்தை சூர்யா தனது இன்ஸ்டா பக்கத்தில் பகிர, தமிழில் சச்சினும் கீச்சகத்தில் பதிவிட்டிருந்தார்.


இந்தச் சந்திப்பு இன்று நடந்துள்ளதாகத் தெரிகிறது. 'மரியாதை மற்றும் அன்பு' என சச்சின் உடன் இருக்கும் படத்தை இன்ஸ்டாவில் சூர்யா இன்று காலை பகிர்ந்திருந்தார்.

இன்று காலை சூரிய உதயம் சிறப்பாக இருந்தது. உங்களைச் சந்தித்தது அற்புதமாக இருந்தது சூர்யா. மனமார்ந்த வாழ்த்துகள் என சச்சின் தமிழில் கீச்சிட்டிருந்தார்.

அண்மையில் கிரிக்கெட் வீரர் அஸ்வின், டெஸ்ட் கிரிக்கெட்டில் 450 விக்கெட்டுகளை கைப்பற்றி சாதனை படைத்தபோதும் சச்சின் தமிழில் கீச்சிட்டு அவரை வாழ்த்தியிருந்தார்.



# முதலிடம் பிடிக்க அஸ்வினுக்கு வாய்ப்பு



ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நாக்பூரில் நடைபெற்ற முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

நாக்பூர் டெஸ்ட் போட்டியில் ரவிச்சந்திரன் அஸ்வின் முதல் இன்னிங்ஸில் 3 இலக்குகளையும், 2ஆவது இன்னிங்ஸில் 5 இலக்குகளையும் வீழ்த்தியிருந்தார். இதன் மூலம் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் அஸ்வின் முதலிடத்தை நெருங்கி உள்ளார். முதலிடத்தில் உள்ள ஆஸ்திரேலியாவின் பாட் கம்மின்ஸுக்கும் (867) அஸ்வினுக்கும் (846) இடையிலான புள்ளிகள் வித்தியாசம் 21 மட்டுமே.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் இந்திய அணி மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ளது. இதனால் அஸ்வின் முதலிடத்தை பிடிக்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

# மீண்டும் கீழே வந்த இந்தியா

டெஸ்ட் கிரிக்கெட்டின் முதல்நிலை அணியாக இந்திய அணி முன்னேறியதான தகவல் தொழில்நுட்பத்தின் தவறால் உண்டானது என பன்னாட்டு கிரிக்கெட் சபை (ஐசிசி) கூறியுள்ளது.

சமீபத்தில் வங்கதேசத்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என வென்றது இந்திய அணி. தற்போது, 4 டெஸ்டுகள் கொண்ட ஆஸி.க்கு எதிரான டெஸ்ட் தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ளது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3-1 என இந்திய அணி வென்றால் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற்றுவிடும்.

இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 2வது டெஸ்ட், தில்லியில் நாளை வெள்ளியன்று தொடங்குகிறது.

இந்த நிலையில் நேற்று வெளியிடப்பட்ட ஐசிசி அணிகளுக்கான டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணி முதலிடத்துக்கு முன்னேறியது. இதையடுத்து டெஸ்ட், ஒருநாள், ரி20 என மூன்றிலும் முதலிடத்தில் இந்திய அணி இருந்ததால் இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் அந்தத் தகவலை மிகவும் கொண்டாடினார்கள். ஆனால் அவர்களுடைய சந்தோம் சில மணிநேரம் கூட நீடிக்கவில்லை. தொழில்நுட்பத்தின் தவறால் இந்திய அணி முதலிடம் வகித்ததாக ஐசிசி விளக்கம் அளித்தது.

பெப்ரவரி 15 அன்று குறுகிய நேரம் ஐசிசி தரவரிசையில் தொழில்நுட்பத்தில் தவறு ஏற்பட்டுள்ளதை ஒப்புக்கொள்கிறோம். அதனால் இந்திய அணி தவறுதலாக முதல்நிலையை எட்டியது. இதனால் ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகிறோம் என்று ஐசிசி கூறியுள்ளது.

தவறு சரி செய்யப்பட்டதையடுத்து ஆஸ்திரேலிய அணி மீண்டும் முதலிடத்திற்கு வந்தது. இந்திய அணி 2ஆம் இடத்துக்குத் திரும்பியது. தரவரிசையில் ஆஸ்திரேலியா 126 புள்ளிகளும் இந்தியா 115 புள்ளிகளும் கொண்டுள்ளன.

# நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் இலங்கிலாந்து பலமான நிலையில்



*நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்ஸில் 325 ஓட்டங்கள் எடுத்துள்ளது.*

*மவுண்ட் மௌளங்கனியில் நடைபெற்று வரும் பகலிரவு டெஸ்டில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. ஸ்டோக்ஸ் - மெக்குல்லம் கூட்டணியில் டெஸ்டிலும் விரைவாக ஓட்டங்கள் எடுத்துப் புரட்சி செய்து வரும் இங்கிலாந்து அணி, நியூசிலாந்திலும் அதே பாணியைப் பின்பற்றியுள்ளது.*

*நியூசிலாந்தில் துடுப்பாளர்கள் ஓட்டம்கள் எடுப்பதே சிரமம் என்கிற நிலை இருக்கையில் வழக்கம்போல வேகமாக ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்கள் பென் டக்கட் 68 பந்துகளில் 84 ஓட்டங்களும் ஹேரி புரூக் 81 பந்துகளில் 89 ஓட்டங்களும் எடுத்தார்கள்.*

*இங்கிலாந்து அணி, 58.2 ஓவர்களில் 9 இலக்குகள் இழப்புக்கு 325 ரன்கள் (ரன்ரேட் - 5.57) எடுத்து டிக்ளேர் செய்தது. நீல் வாக்னர் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். எல்லா நியூசிலாந்து பந்துவீச்சாளர்களும் ஒரு ஓவருக்குக் குறைந்தது 4 ஓட்டங்களுக்கு மேல் சராசரியாகக் கொடுத்திருந்தார்கள்.*

*நியூசிலாந்து அணி முதல் நாள் முடிவில் 18 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 37 ஓட்டங்கள் எடுத்துள்ளது. டாம் லதம், வில்லியம்சன், ஹென்றி நிகோல்ஸ் ஆகிய வீரர்கள் ஆட்டமிழந்துள்ளார்கள். ஆண்டர்சன் 2 இலக்குகளையும் ஆலி ராபின்சன் 1 இலக்கையும் எடுத்துள்ளார்கள்.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.02.2023 இல் வெளியிடப்பெற்றது.